

# பண்டிதர் தியாகராஜா பொன்னம்பலவாணர் ஐயா

(பொன்னாலை சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

28.11.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம் | அமரர் | மறைவு
16.10.1945 | | 26.03.2021

# பண்டிதர் தியாகராஜா பொன்னம்பலவாணர்

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

பொன்னம்பல வாணர்ஐயா பொன்னாலைப் பொற்பணியான்
பொன்னம்பல வாணர்தாள் சேர்ந்தநாள் - பொன்னான
சார்வரியின் பங்குனிப்பூர் வத்திர யோதசி
சேர்பிர தோஷமென்று சாற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

## பிரார்த்தனைச் செய்தி

அன்புள்ள பொன்னம்பலவாணர் இவர்களுடைய மறைவு சைவத்தமிழ் மக்களுக்கு பெரிய இழப்பாகும். பண்டிதருடைய பெயருக்கு இலக்கணமாக இயம நியமங்களை ஒழுங்குபடுத்தி தானும் வாழ்ந்து அனைவரும் வாழ வேண்டுமென விரும்பியவர். நித்திய சந்தியாவந்தனம் சிவபூஜை செய்தவர். சிவசின்னங்களை அணிந்து ஆதீனத்தில் நடைபெற்ற சித்தாந்த வகுப்புகளிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்தாந்த பீடத்தில் பங்களிப்புகளையும் செய்து ஈழநாடு பத்திரிகை மூலமாக அருளாளர் என்ற பெயர் மூலமாக பல சமயத் தகவல்களை வெளிக் கொணர்ந்த பெருமைக்குரியவர். பண்டிதர் என்றால் இப்படித்தான் வாழவேண்டும் என வாழ்ந்து வழிகாட்டிய பண்டிதர் பொன்னம்பலவாணருடைய மறைவு எல்லோரையும் மனம் நெகிழ வைத்தது. இவருடைய ஆத்மா சாந்தியடைய இறை அருளை வேண்டி நிற்கின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராம ஜெயம்
Srirama Jeyam

**வேதாகமகிரியா கலாபூஷணம் பிரதிஷ்டா கிரியாபானு**
**ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ. க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்**
பிரதமகுரு, பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
**Vedakama Kiriya Kalapusanam, Pirathisda Kiriyabanu**
**Sri Vishnu Sri K.S. Somaaskanthakurukkal**
*Chief Priest, Ponnalai Sri Varatharajapperumal Thevasthanam*

பொன்னாலை,
சுழிபுரம்.

Ponnalai,
Chulipuram.

---

# பொன்னாலையில் வந்துதித்த மாதவம் பண்டிதர் திரு. பொன்னம்பலவாணர்

பொன்னாலை கிராமத்திலே பிறந்து வாழ்ந்து கொண்டிருந்த ஐயா அவர்கள் தமிழ் மொழிக்கும், சமஸ்கிருத மொழிக்கும், சைவ சமயத்துக்கும், தமிழ் சமஸ்கிருத இலக்கிய உலகிற்கும் இவை சார்ந்த வகையில் சமூகத்திற்கும் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. அத்தகைய பெருந்தகையின் இழப்பு பேரிழப்பாகும். திரு. பண்டிதர் பொன்னம்பலவாணர் அவர்கள் என்னுடன் பல உலக சமய சமூக ஆலய விஷயங்களை அவ்வப்போது பகிர்ந்து பல பயன்தரு நூல்களையும் பரிமாறியுள்ளோம். மேலும் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய அர்ச்சகர்கள் சுழிபுரம் குடியிருப்பில் வாழ்ந்த சிவஸ்ரீ. குமாரசாமிகுருக்கள், சிவஸ்ரீ. சி. வரதராஜக்குருக்கள், வைத்தீஸ்வரர்சர்மா, பிரம்மஸ்ரீ. தியாகசிரோன்மணி மனைவியாக சிரோமணி சீதாராமசாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ. பாலகுருசாமிசர்மா போன்றவர்களிடம் கல்வி கற்றும் கேட்டும் வந்த பெருமகன்.

யாழ். பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த வகுப்புககளை விசேடமாக விரிவுரையாளராகவும், சைவப்புலவர் சங்கம், சிவதொண்டர் நிலையம், இந்து சமய பேரவை, சைவபரிபாலன சபை சமய சபைகளில் சமய போஷகராகவும், சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தவர். இவர் தமிழ், சமஸ்கிருத விற்பன்னராகவும், எழுத்தாளராகவும், புராணபடனபேராசானாகவும் திகழ்ந்தவர். பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஆலோசகராகவும், நிர்வாக உறுப்பினராகவும் பணியாற்றியவர். பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் அவர் திவ்யபிரபந்தம் படிக்கையில் அதில் ஒரு தனிச் சுவையினை உணரலாம். திருமுறை, பெரியபுராணம், கந்தபுராணம், ஏகாதசிபுராணம், திவ்யபிரபந்தம் போன்றவற்றை திறமாக உரைக்கும் புராணிகராவார். நடமாடும் பல்கலைக்கழகமான இவர் பல சிறந்த சிவாச்சாரியார்களு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனும் பலதரப்பட்ட கல்விமான்களுடனும் அன்பாகப் பழகி எல்லார் மனதிலும் இடம் பிடித்த பெரியார்,

பண்டிதர் அவர்கள் மார்ச் 20ஆம் தேதி யாழ்ப்பாணம் கந்தர்மடம் இந்துப் பேரவை நடராஜப் பெருமான் கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் கர்மாரம்பத்தில் கலந்து கொண்டு சிறப்பித்து கிரியைகள் நிறைவு பெற்றபின் ஒன்பது முப்பது மணி அளவில் என்னுடனும் தலைவர் சக்திகிரிபனுடனும் பலதரப்பட்ட சமய சம்பிரதாயங்களைப் பற்றி கலந்துரையாடி காலை உணவும் உண்டு பதினொரு மணி அளவில் சிவதொண்டன் நிலையத்திற்கு திருமுறை புத்தகங்களை எடுத்துக்கொண்டும், மனைவி வீட்டிற்குச் செல்ல வேண்டும். இனி தனக்கு வரநேரமில்லை. எமது பிள்ளையார் கோவில் திருவிழா ஆரம்பிக்க இருப்பதால் நேரமில்லை. நிறைய வேலைகள் இருப்பதாகக் கூறிச் சென்றார். ஆனால் இறைவன் என்ன நினைத்தானோ இராணுவ வாகனம் மோதி சுயநினைவு இழந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு ஏழு தினங்களின் பின் பிள்ளையார் திருவடிகளை பிரதோஷ காலத்தில் சென்றடைந்தார்.

பிள்ளையாருக்கு பரம்பரை பரம்பரையாக பூஜை செய்தவர். தவறாது சிவபூஜைகள் செய்பவர். இறுதி நேரத்தில் என்னுடன் பல மணி நேரம் உரையாடினார். இவர் பொன்னாலை வரதராஜப்பெருமாள், பொன்னாலைப் பிள்ளையாருக்கு இரு கண்களாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.

"பிரதிஷ்டாசிரோமணி"

ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ க. ச. சோமாஸ்கந்தாச்சார்யார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIVAPOOMI TRUST
# சிவபூமி அறக்கட்டளை

**Head Office :** Sivapoomi
Kondavil East,
Kondavil.

E_mail:- sivapoomi@gmail.com,
Web:- www. sivapoomi.org

T.P No: 021 2227938



**Board of directors**

**President**
*Dr.Aru Thirumurugan*
Prinicipal
Skandavaroodaya College
Chunnakam

**Vice President**
*Mr.K.Sivaji*
Rtd.Prinicipal
Skandavaroodaya College
Chunnakam

*Mrs.K.Kugathasan*
Kondavil

**Secretary**
*Mr.P.Srivigneswaran*
Divisional Dirctor
Department of Education

**Asst. Secretary**
*Mr.M.Thayaharan*
Manager
H.N.B Bank

**Treasurer**
*Dr.S.Kugathasan*
Eye Surgeon
Jaffna.

**Asst. Treasurer**
*Mr.M. Vijayaragunathan*
Accountant
Jaffna.

**Patron**
Rishi Thondunathan Swami


**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்**

## செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனைச் செய்தி

ஈழத்திருநாட்டில் சைவத் தமிழர்களின் நடமாடும் களஞ்சியமாக விளங்கிய பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்களின் பிரிவுச் செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைகிறேன். 1976இல் யாழ் இந்துக்கல்லூரி மாணவனாக விளங்கிய காலத்தில் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிய பண்டிதர் அவர்களுடன் பழக்கம் ஏற்பட்டது. ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியராக விளங்கிய திரு. ந. சபாரத்தினம் ஐயா அவர்கள் பண்டிதரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். எனது கட்டுரையை பண்டிதரிடம் ஒப்படைத்து திருத்துமாறு அவர் பணித்தார். அன்றே பண்டிதரின் ஆற்றல் கண்டு வியந்தேன். அன்றிலிருந்து அவரது உயிர் பிரியும் வரை என் மீது அவர் காட்டிய அன்பை மறக்க முடியாது.

பண்டிதர் அவர்களின் ஆற்றல் எல்லையற்றது. கந்த புராணத்தில் எந்த இடத்தைக் கேட்டாலும் பாட்டும் பொருளும் சொல்லும் தெளிவு அவரிடமிருந்தது. திருவாசகம் முழுவதும் மனனமாகச் சொல்லும் ஆற்றல் அவரது தனித்துவம். நூல்களைப் படித்துப் படித்து அதன் உட்கிடக்கைகளை ஒப்பிட்டுச் சொல்லும் ஆற்றல் அவரது சிறப்பம்சம் எனலாம். சதா திருமுறை நூல்களை தன் கையில் சுமந்த வண்ணம் காட்சி தந்தவர். பண்டிதர் அவர்களை அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் அறக்கட்டளை விழாவில் கௌரவிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. மிக எளிமையான ஞானியாக எம்மத்தியில் வாழ்ந்து இறையழைப்பை ஏற்றுச் சென்று விட்டார். பொன்னாலை சித்தி விநாயகர் திருவடியில் உறைந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. அவரது பிரிவு என்பது நிரப்ப முடியாது. அறிவுக் களஞ்சியமாக விளங்கிய சான்றோனை நாம் இழந்து விட்டோம். அன்னாரின் ஆத்மா இறையடியிலிருந்து எம்மை என்றும் ஆசீர்வதிக்க வேண்டி அமைகிறேன்.

கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தலைவர் - சிவபூமி அறக்கட்டளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# இந்து சமயப் பேரவை – யாழ்ப்பாணம்

**INTHU SAMAYA PERAVAI – JAFFNA**

**(The Hindu Congress)**

பதிவு இல :- HA/A/JA/166
தலைமை அலுவலகம் :- 141, பலாலிவீதி,
கந்தர்மடம்,யாழ்ப்பாணம்
இலங்கை
தொ.பே :- 021 222 6048, 076 168827, 076 6224116

Regd No :- HA/A/JA/166
Head office :- 141, Palaly Road,
Kanthermadam, Jaffna.
Srilanka.
Telephone :- 021 222 6048

**தலைவர் / President**
ஸ்ரீ.சி.சக்திகிரீவன்
Shri S.Sakthigrivan

**துணைத் தலைவர்கள் / Vice President**
திரு.இ.ஜெயசேகரன் ச.நீ
Mr.R.Jeyasekaran J.P
திரு.இ.ஜனக்குமார் ச.நீ
Mr.R.Janakkumar J.P
பேராசிரியர் இ.சிவச்சந்திரன்
Prof. R.Sivachandran
திரு.க.மகாதேவசிவம்
Mr.K.Mahadevasivam

**கௌரவ செயலாளர் / Hon.Secretary**
திரு.த.சற்குணராசா ச.நீ
Mr.T.Satkunarajah J.P

**உப செயலாளர்கள்/ Vice Secretaries**
பேராசிரியர் மா.வேதநாதன்
Professor M.Vethanathan
திரு.கு.நித்தியானந்தன்
Mr.K.Nithiyananthan

**பொருளாளர் / Treasurer**
பேராசிரியர் கா.குகபாலன்
Prof. K.Kugabalan

**போஷகர்கள் / Pataons**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)
Srilasri. Somasuntharathesiga Gnana Sambantha Paramacharya Swamikal (Nallai Aatheenam)
பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்
Prof.S.K.Sittampalam
திரு.இ.பேரின்பநாயகம்
Mr.R.Perinpanayakam

## பண்டிதர் பொன்னம்பலவாணர்
## மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு

ஈழநாடு பெற்றெடுத்த தவப்புதல்வர்களிலொருவரும், சைவத்தமிழ் பேரறிஞருமான பண்டிதர் தி. பொன்னம்பலவாணரின் இழப்பு தமிழ் உலகுக்கும் குறிப்பாக நமது நாட்டிற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பை ஏற்படுத்தி விட்டது. தமிழை முறையாகக் கற்றவர்கள் அருகி வரும் காலத்தில் பேரன்பிற்குரிய பண்டிதரின் இழப்பு எம்மனதைப் புண்ணாக்கி விட்டது. கடந்த சனிக்கிழமை எம்மைச் சந்திப்பதற்காக வந்து சென்ற பின் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதை அறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தேன். வழமையில் என்னைச் சந்தித்து செல்வது போல் எண்ணினேன். இனிமேல் இப்படிப் பயணம் செய்வது கடினம் என்றார். யான் இப்படி ஒரு நிகழ்வை எதிர்பார்க்கவில்லை. எல்லாம் அவன் செயலே.

நாவலர் பாரம்பரியத்தின் அடையாளமாகத் திகழ்ந்த இவரின் சிவபூஜாக்கிரமமும், செந்தமிழிலக்கணத் தெளிவும், புராண இதிகாசத் தேர்ச்சியும், திருமுறை பாராயண நியமமும், சைவ சித்தாந்த ஆராய்ச்சித் திறனும், வடமொழிப் புலமையும் மக்களை அவர்பால் கவர்ந்திழுத்தது. தமிழ் இலக்கணவிலக்கிய சைவ சாத்திர விடயங்களில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்ப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். இத்தகைய ஆற்றல் படைத்த ஒருவர் ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியராக என்பதுகளில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இவரது ஆத்மா ஆடல் வல்லான் திருவடியின் கீழிருந்தின்புறப் பிரார்த்திப்பதோடு, அன்னாரை இழந்து தவிக்கும் அன்னாரின் அன்புத் தாயார், அன்னார் அன்பு மனைவி, சுற்றத்தார், நண்பர்களுக்கு மன அமைதி ஏற்பட எமது வழிபடு தெய்வமான நடராஜமூர்த்தியை திரிகரணசுத்தியோடு பிரார்த்திக்கின்றேன்.

ஈசான சிவசக்திகிரீவன்
தலைவர் (இந்து சமயப்பேரவை-யாழ்ப்பாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டர் நிலையத்தினரின் அஞ்சலிச் செய்தி

ஈசனை எல்லா உயிர்க்கும் உயிரைத்
தேசனை செம்பொன் அம்பல வாணரை
வாச மலர்கொடு வாழ்த்தி வணங்கி
பாச வினையின் பற்றறுப் போமே
ஓதுக அதுராம் ஓம்தத் சத்ஓம்.
- நற்சிந்தனை.

பொன்னம்பலவாணர் சிவதொண்டரால் நினைதற்குரியரே. அவர் பட்டணம் வரும் போதெல்லாம் சிவதொண்டன் நிலையம் வருவார். மௌனமாய் இருந்து இளைப்பாறுவார். திருவடிக்கீழ் அமர்ந்து ஆறுதல் பெற நாடுவோர்க்கு வேண்டும் நன்மொழிகளைப் பகர்வார். அவ்வப்போது சிவதொண்டன் இதழுக்கென இனிய கட்டுரைகள் எழுதுவார். அவை அளவிற் சிறியனவாயும், பொருளிற் பெரியனவாயும் சுவை பயக்கும்.

அவர் அன்றைய நாளில் சிவதொண்டன் நிலையத்தில் அமர்ந்திருந்து நீண்ட நேரம் அளவளாவினார். ஐந்தெழுத்து மந்திரத்தை வளைய வளைய வருவனவாக அவர் வாய் மொழிதல் அமைந்தன. அவ்வாய்மொழிகள் அவரது நெஞ்சகத்து நினைவு நின்றும் ஊற்றெடுத்துப் பெருகின. "இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினைய மாட்டேன்" என்று அவ்வப்போது சொல்லும் மொழியை அன்றும் சொன்னார். ஐந்தெழுத்து நினைவு அவரை எய்த வைக்க வேண்டும் என்பதே அவர் விளைவாய் இருந்தது. அன்று அவரது நினைவு இறைவனை எயதற்கான நினைவாகக் கனிந்தது போலும். அவர் சிவதொண்டன் நிலையத்திலிருந்து வெளிப்போந்து சிலயார் தூரமே சென்றிருப்பார். பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலின் அருகே அவர் அங்கம் மண்ணில் விழுந்தது.

"அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உள்ளே வைத்து
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமா நின்னை
சங்கொத்த மேனிச் செல்வா சாவுநாள் அடியேன் உன்னை
எங்குற்றாய் என்றபோதால் இங்குற்றேன் எனகண்டாயே"
- திருநாவுக்கரசு சுவாமிகள்.

அவர் எய்த நினைந்த பொருள் இங்குற்றேன் என்று இணையடிக்கீழ் வைக்கும் அருட் பெருக்கினதே.

"நமச் சிவாயவே நான்மறை ஆகமம்
நமச் சிவாயவே மந்திர தந்திரம்
நமச் சிவாயவே நம்முடல் உயிர்பொருள்
நமச் சிவாயவே நற்றுணை யாகுமே"
- நற்சிந்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எங்கள் புலமை மரபின் உணர்வரிய மெய்ஞானி பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் ஐயா" மேனாள் துணைவேந்தர் அஞ்சலி

உணர்வரிய மெய் ஞானியாக விளங்கிய பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் ஐயா, எங்கள் புலமை மரபின் உன்னதம். தமிழியல், சைவ சித்தாந்த மெய்யியல், இதழியல் என பன்முகத் தடங்களில் முத்திரை பதித்தவர். பண்பாட்டு உணரதிறனோடு சமூகப் பணிகளில் அயராது உழைத்தவர்.

அவரோடு பழகக் கிடைத்த பொழுதுகளின் மேன்மையினை உரைத்திட வார்த்தையில்லை. ஈடுசெய்யமுடியாத பண்பாட்டு இழப்பினால் தவிக்கும் உறவுகளோடு அவர் மேலான நினைவுகளைக் காக்கும் உறுதியுடன் பிரார்த்தனை செய்வோம்.

பெறுமதியான அவரின் வாழ்வை எழுத்துக்களை ஆவணப்படுத்தும் கடமை எமக்கானது. இந்தப் பணியிலே இசைந்துள்ள அனைவருக்கும் எல்லையில்லாத என் அன்பும் வாழ்த்தும்.

**பேராசிரியர் கலாநிதி என் சண்முகலிங்கன்**
**மேனாள் துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் மிக அமைதியான, வித்துவத் திறனையும் அருளொளியினையும் வெளிப்படுத்தும் தோற்றமுடையவர். அவரைக் காணும்போதெல்லாம் அவரைக் கும்பிடவேண்டுமெனக் கை தானானக் குவியும். இது என்னுடைய தனிப்பட்ட பட்டுணர்வு. அவர் ஒரு பல்துறை விற்பன்னராக இருந்தார். தமிழ், சமஸ்கிருத மொழிகளிலே நல்ல தேர்ச்சியும், தமிழ் இலக்கியம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றில் நல்ல அறிவும் உடையராக விளங்கினார். இதனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது.

அவருடைய பன்முகத் திறன்களை நோக்கி, தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் அவருக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவாக சிவத்தமிழ் விருது 2017 ஆம் ஆண்டு வழங்கியது.

பண்டிதர் பொன்னம்பலவாணர் ஒரு சிறந்த அந்தணப் பெருமகனாகவும் திகழ்ந்தார். அவர் பொன்னாலை சித்திவிநாயகர் திருக்கோவிலின் பூசகராகவும் அத் திருக்கோயிலின் அறங்காவலராகவும் விளங்கினார். கோயிலின் அர்ச்சகர்களே அக்கோயிலைப் பரிபாலிப்பவர்களுமாயிருந்தால் நம்மூர்க் கோயில்களின் பல சிக்கல்கள் தீர்ந்து போகலாம் என நம்புகிறேன். இதற்கு பண்டிதர் பொன்னம்பலவாணர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

பன்முகப்பட்ட பணிகளுள் அவர் ஊடகவியலாளராகவும் இருந்தது விதந்து கூறப்பட வேண்டியது. ஒப்பு நோக்குநராக 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றிய பொன்னம்பலவாணர் அப்பத்திரிகையின் துணை ஆசிரியராக ஆனார். ஓர் ஆசிரியராக, எழுத்தாளராக, அந்தணப் பெருமனாக, சமூகசேவையாளராக, ஊடகவியலாளராக விளங்கிய பண்டிதர் தி. பொன்னம்பலவாணரின் அகாலச் மறைவு பலருக்குப் பெருந்துயரைக் கொடுத்தது. அவருடைய ஆன்மா ஆடவல்லானுடைய தாமரைத் தாள்களிலே அமைதிபெற்று இன்புற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர் முனைவர் அ. சண்முகதாஸ்
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணமில்லாப் பெருவாழ்வு

மதிப்பிற்கும் போற்றுதலுக்குமுரிய சைவத்திரு தியாகராஜா பொன்னம் பலவாணர் அவர்கள், எவரும் எதிர்பார்க்காதவண்ணம் அமரத்துவமடைந்த செய்தியை இந்தக்கணமும் எம்மால் நம்பவே முடியவில்லை. அன்னாரின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். சைவ ஆகமங்களில் ஆழமான அறிவுடையவர். தமிழ் அறிஞர். சைவ ஒழுக்க நெறியில் வாழ்ந்தவர். சிவாகமம் சம்பந்தமான சந்தேகங்களைத் தீர்க்க வல்லவர். சைவ சித்தாந்தத்தில் புலமை மிக்கவர். சிவாகமக் கிரியைகள் ஆற்றுவதில் வல்லுனர். இப்படிப் பலவகையான ஆளுமைகளைக் கொண்ட அமரர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்து நாகரிகம், சைவ சித்தாந்தம், சைவ சித்தாந்த முதுகலைமாணி ஆகியவற்றைப் பயின்ற பல மாணவர்களுக்கு அவ்வப்போது வேண்டிய அறிவுரைகளைக் கூறி ஆற்றுப்படுத்திய பெருந்தகையும் ஆவார். சைவ சித்தாந்த அறிஞரான அமரர் ஆ. சபாரத்தினம் இவரை ஓர் "ஆகமப் பொக்கிஷம்" என்று பல முறை என்னிடம் கூறியிருக்கின்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்துக் கற்கைகள் பீடம் உருவாகியதையிட்டு உளமார மகிழ்ந்தவர்களுள் இவரும் ஒருவர். பழகுவதற்கு மிகவும் இனியர். சிவாலயக்கிரியை மரபுகளைக் கவனமாகச் செய்யும் செயல்வீரனான இவர், தனது குல தெய்வமான பொன்னாலை சித்திவிநாயகர் ஆலய முகாமையாளராகவும், ஆலயக் குருமணியாகவும் விளங்கி ஆலய முன்னேற்றத்திற்கே ஊக்கமுடன் உழைத்த பெருமகன். இத்தகைய சான்றோர்களினால் பொன்னாலையும் பெருமை பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை 2017ஆம் ஆண்டில் நடத்திய 2வது அனைத்துலக சைவ மாநாட்டின் "சைவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்த சான்றோர்'' என்ற கௌரவம் இவருக்கும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக வாழ்க்கை நிலையில்லாதது. நேற்று இருந்தவர் இன்று இல்லை. உலகத்தின் இத்தகைய நிலையை திருவள்ளுவர்,

"நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு"

என்று மொழிவர்.

அமரரின் ஆத்மா மரணமிலாப் பெருவாழ்வு பெற்று, என்றும் இறையடியில் பேரானந்தம் பெறத் திருவருளை வேண்டிப் பணிகின்றோம்.

பேராசிரியர் மா. வேதநாதன் (ஓய்வு)
மேனாள் தலைவர், இந்துநாகரிகத் துறை
யாழ். பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் உவந்தேத்தும் உத்தம அறிஞர்

யாழ்ப்பாணத்தில் நல்ல தமிழறிஞர்கள் உருவாகுவதற்குத் தோன்றிய ஸ்தாபனங்களில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் முதன்மையாகச் சொல்லலாம். முகாந்திரம் சதாசிவ ஐயரின் அயரா உழைப்பினால் உருவாகிய ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் செவிலித் தாயார் போல் பண்டிதர் செ. துரைசிங்கம், வித்துவான் பொன் முத்துக்குமாரன் முதலியோர் நற்பணியாற்றினர். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க பண்டித பாலபண்டித வகுப்புக்கள் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றன. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வித்துவான் ந. சுப்பையாபிள்ளை முதலிய யாழ்ப்பாணத் தமிழ் பேரறிஞர்கள் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடாத்தும் வகுப்புகளுக்குப் பேராதரவு தருபவர்களாக விளங்கினார்கள்.

பொன்னாலை சுழிபுரம், பண்ணாகம், வட்டுக்கோட்டை முதலிய ஊர்களிலிருந்து பல மாணவர்கள் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் பண்டித பாலபண்டித வகுப்புக்களில் மிகுந்த விருப்பத்துடன் வந்து பயின்றார்கள். அவ்வாறு பயின்றவர்களில் இன்றும் எம்மனக்கண்முன் தோற்றமளிக்கும் ஒருவர் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் ஆவார். "கல்லாமலே வித்தை குலம் பாதி" என்பார்கள். திருவாளர் பொன் தியாகராசா ஆகிய தந்தையாரின் குருத்துவ ஆற்றலும் சிறிய தகப்பன் வித்துவான் பொன் முத்துக்குமாரன் அவர்களின் வித்துவ ஆற்றலும் பண்டிதர் தி. பொன்னம்பலவாணரின் அறிவாசார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. எந்த விதமான பரபரப்பு மில்லாமல் அவதானமாக எதையும் பார்க்கின்ற இயல்பு பண்டிதர் தி. பொன்னம்பலவாணரிடத்தில் இயற்கையாக அமைந்திருந்தது.

மனமொழி மெய் மூன்றினும் தூய்மை உடையராய் உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியராய் நாம் நன்கறியுமாறு வாழ்ந்த பெருமை பொன்னம்பலவாணருக்கு என்றும் சிறப்புற்றிருந்தது. பரம்பரைப் பேறாகவும் தம் ஊக்கம் உடமையாலும் அவர் பெற்றிருந்த சைவத் தமிழ் அறிவு எம்மவர்க்கும் பெரும் பயன் தருவதாக அமைந்திருந்தது. கலங்கரை விளக்காக சைவத் தமிழ் உலகிற்குத் தம் வாணாளை முழுவதும் விளக்கந் தந்து வாழ்ந்தவராக நாடு மதிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் எல்லாப் புராணங்களுக்கும் பயன் சொல்வதில் வல்லவராவார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கூறிய புராணபடன விதிகளுக்கு அமையவும் கேட்பவர் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் பொன்னம்பலவாணர் அவர்கள் எல்லாப் புராணங்களுக்கும் பயன் சொல்வார். கேட்டவர் பேரானந்தம் அடைவர்.

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் ஒரு புராணபடனகாரர்
நாவலர் வழியில் வாழும் எடுத்துக் காட்டாளர்
கேட்போர் மனம் சோர்வடையாது இரகசியங்களை
இனிதாகத் தொட்டுச் சொல்பவர். இவர் புராணபடனஞ் செய்யும் போது சொல் பொருள் ஓசை என்பன இனிய நடை போடும்.

இவ்வாறாக காசி காண்ட அணிந்துரையில் அதிபர் சி. கந்தையா அவர்கள் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்களின் ஆற்றலை அப்படியே எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக மிக நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தமையால் அவரின் சிறப்பான செயற்பாடுகளை யெல்லாம் நன்கறிந்து கொள்ளும் பேறு பெற்றுக் கொண்டேன். புரான படன நிகழ்ச்சிகளில் நாமிருவரும் அடிக்கடி சந்திப்போம். புராணங்களில் உள்ள நுட்பங்களை யெல்லாம் இலகுவாக எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடியதாக அவர் பயன் சொல்லுவார். எல்லோரும் கேட்டு மகிழ்வோம். அனைவரும் பாராட்டுவர்.

அகில இலங்கைத் திருமுறை மன்றச் செயற்பாடுகளுக்கு உதவியவாகளில் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்கள் பெரும் பங்கு உடையவராவார். அகில இலங்கை திருமுறை மன்ற அமைப்பாளர் அமரர் சி கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து எல்லாம் சிறப்புற நடாத்தி வந்தவர் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் ஆவர்.

பத்திரிகையில் எழுத்தாளராகவும் பண்டித வகுப்புக்களில் இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியராகவும் கோயில் பூசையில் குருக்களாகவும் புராண படனங்களில் பயன் சொல்பவராகவும் தன் வாழ்நாள் முழுவதும் அருந்தொண்டாற்றி உலகுக்குதவிய பேறறிவாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர். அவர்களைச் சைவத் தமிழ் உலகம் என்றைக்கும் போற்றிப் புகழும் என்பது உறுதி.

தக்காராய்த் தன்கிளை வாழ என்றும் உறுதியாக உழைத்த உத்தமர் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்களின் பிரிவால் தாங்கொணாத் துயரில் வாடும் துணைவியாருக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அனைவரின் நலனுக்காகவும் தன் வாணாள் முழுவதும் வழிபாடியற்றிய அவரின் ஆத்ம சாந்திக்காக நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

சாந்தி சாந்தி சாந்தி.

வ. பேரின்பநாயகம்
தலைவர்
அகில இலங்கைத் திருமுறை மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**K.P.S. VARATHARAJAH (OFFICE)**
**Rtd. High Court Judge**
**523, Point Pedro Road,**
**Nallur, Jaffna,**
**Sri Lanka.**

# அஞ்சலி

காலஞ்சென்ற எனது நண்பர் திரு.தியாகராஜா பொன்னம்பலவாணரின் நினைவுகள் எனது மனதில் இன்னமும் பசுமையாகவே ஞாபகம் இருக்கின்றது. திரு. வாணரின் தகப்பனாருடைய துவிச்சக்கர வண்டியிலேயே நானும் சைக்கிள் ஓடக் கற்றுக் கொண்டேன்.

தமிழாராய்ச்சி மாநாடு தொடங்குவதற்கு முன்பாகவே திரு. பொன்னம்பலவாணர் ஒரு குழுவிற்குத் தலைவராகவும், நான் மறுபக்கத்திற்குத் தலைவராகவும் இருந்து காலஞ்சென்ற பெரு மதிப்பிற்குரிய திரு. அமிர்தலிங்கம் அவர்களை மத்தியஸ்தராக அழைத்துப் பொன்னாலை வரதராஜப் பெருமாள் பாடசாலை மண்டபத்தில் பேச்சுப் போட்டி நடாத்தினோம். திரு. அமிர்தலிங்கம் (M.P) அவர்கள் முடிவு கூற மறுத்து விட்டார். காரணம் இரு குழுவினரும் சமமாகவே பேசியதால் பின்னர் நான் சட்டக் கல்லூரிக்குச் சென்று விட்டேன். திரு. பொன்னம்பலவாணர் அவர்கள் சமஸ்கிருத மொழியில் பால பண்டிதராகப் பட்டம் பெற்றார். காலஞ் சென்ற திரு. காசிச் செட்டி அவர்களுக்கும் அதன் பின்னர் காலஞ்சென்ற கார்த்திகேசுச் செட்டியார் அவர்களின் மறைவின் பின்னர் இரண்டு முறைகள் கிருஷ்ணன் தூதினைப் படிக்கும்படி ஏற்பாடு செய்தோம். அதன் பின்னர் அதனைத் தொடரவில்லை. காரணம் கேட்பார் எவருமில்லை.

அதன் பிறகு கனடாவிலும், அவுஸ்திரேலியாவிலும் ஸ்ரீமத்பாகவதம் சொல்வதற்கு எண்ணியிருந்தேன். திரு. பொன்னம்பலவாணரை இருமுறைகள் மாத்திரம் பொன்னாலை விநாயகர் ஆலயத்திற்குச் சென்ற போது சந்தித்தேன். மனம் விட்டுப் பேச அவகாசம் கிடைக்கவில்லை. இருப்பினும் பொன்னாலை கலசெட்டியவத்தை வாழ் விநாயகர் ஆலய பூஜை நியமங்கள் தொடர்வதற்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்வதற்கு எண்ணியுள்ளேன். திரு. பொன்னம்பலவாணர் என்னிலும் பார்க்க ஒரு வயது குறைவானவர்.

பண்டிதர் திரு.பொன்னம்பலவாணர் அவர்களின் ஆன்மா விநாயகரின் பாதம் அடைய பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு
K.P.S. வரதராஜா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரறிவுப் பொக்கிஷம் ஒன்று நமை விட்டு மறைந்தது

தியாக பொன்னம்பலவாணர் ஐயா எம்மை விட்டு சடுதியாக பிரிந்து சென்றமையானது கிராம த்தவர்களுக்கு மட்டும் அன்றி வலிகாமம் மேற்குப் பகுதிக்கே மிகப்பெரிய பேரிழப்பாகும்.

பொன்னாலைப் பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருவாகவும், தர்மகர்த்தாவாகவும் செயல்பட்டு வந்தார். ஐயா அவர்களுடைய காலத்திலேயே எம்பெருமானுக்கு மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்ட சிறப்பும், அத்தோடு ஆலயம் சிறந்த முறையிலே புனருத்தாரணம் செய்யப்பட்டு வசந்த மண்டபம், யாகமண்டபம், ராஜகோபுரம் ஆகியன அமைக்கப்பெற்று புதுப்பொலிவோடு திகழ்வது அவருடைய முயற்சிக்கும் அர்ப்பணிப்புக்கும் மிகப்பெரிய எடுத்துக்காட்டாகும்.

ஐயா அவர்கள் மகா சிவராத்திரி மலர், பிள்ளையார் கதை ஆகிய நூல்களை தொகுத்தும் காசிபுராணத்துக்கும், பறாளை விநாயகர் பள்ளுக்கும் புதிதாக உரை எழுதியும் சிறப்பித்தமை ஐயா அவர்கள் சைவத்துக்கும், தமிழுக்கும் ஆற்றிய தொணடானது அளப்பரியதாகும். அத்தோடு தமிழ் தினசரி பத்திரிகையான ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தில் சில காலம் பணியாற்றி உள்ளார். ஆகவே ஐயா ஒரு பண்டிதர் என்பது மட்டும் அல்லாமல் ஒரு தெய்வீக புலவர், கவிஞர், உரையாசிரியராக எல்லாம் பரிணமித்து இருந்தார்.. அத்தோடு கிராம சமாதான நீதவான் ஆகவும் இருந்தார். மேலும் ஐயா அவர்கள் கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றவற்றுக்கு உரை சொல்லல் என்பது ஐயாவின் கைவந்த கலையாகும். வலிகாமம் மேற்கில் பல ஆலயங்களில் புராணங்களுக்கு உரை சொல்லி சைவத்தையும் தமிழ்மரபினையும் காத்த மகான் ஆவார்.

இன்னும் பலர் சமயத் தத்துவங்கள் வழிபாட்டுமுறைகள் போன்றவற்றின் தங்களுடைய சந்தேகங்களை ஐயா அவரிடம் வந்து கேட்டு அறிவார்கள். அத்தோடு மாணவர்கள் கூட தங்களுடைய கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமான அறிவுரைகளை எல்லாம் ஐயாவிடம் கேட்டு பலன் பெற்று இருக்கிறார்கள். தியாக பொன்னம்பலவாணா் ஐயா அவர்களுடைய பிரிவால் துயருறும் அனைவருக்கும் எனது அனுதாபங்களையும் தெரிவித்து கொள்வதோடு அவருடைய புனிதமான ஆத்மா சாந்தி பெற சித்திவிநாயகப் பெருமானை வேண்டுகின்றேன். ஐயா அவர்களுடைய நாமம் வாழ்வதாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இங்ஙனம் பேரறிவாளனின் பிரிவால் துயருறும்
திருமுறைச் செல்வர் மாதவர் - ஆனந்தவடிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் ஐயா பற்றிய சிந்தனைத் துளிகள்

1945.10.16 ஆம் திகதி பண்டித உலகம் செழித்தோங்க என அவதரித்து பொன்னாலையில் பொன்னென திகழ்ந்த ஓர் அற்புதக் கல்விமான் ஆவார். இவர் சித்திவிநாயகரை சித்தத்துள் தேக்கிய செம்மல். சிவப்பணியே (ஆன்மீகப்பணி) தன் பணி என கொண்ட பெருந்தகை. இவர் கல்வித் துறையில் துறை போனவர் அ∴து இவர் பெற்ற விருதுகளான சைவ பூஷணம், கலாபூஷணம், சிவத்தமிழ் என்பவற்றால் விளங்குகின்றது. தோற்றத்தில் அகத்தியராய் அன்புத் தேற்றத்தில் மாமலையாய், கைலையங்கிரியாய் திகழ்ந்தவர் எனின் மிகையாகாது.

பந்த பாச சந்தைக் கூட்டத்துள் சிந்தை செலுத்தாத பட்டை தீட்டிய வைரம். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க செயலாளராக இருந்து கல்விச் சேவை செய்த காலத்தில் ஏலவே இவரை கரணவாய் மூர்த்த விநாயகர் ஆலய தொடர்பினால் மானச குருவாகக் கொண்டேன். 2007,2008, 2009 ஆம் ஆண்டுகளில் முதுகலைமாணி சைவ சித்தாந்த கற்கை நெறியில், பண்டித பரீட்சையில் 2008ல் சித்தி பெற்று பண்டித மாணவனுமாய் அவரது அன்புக்குரிய மாணவனானேன்.

பண்டிதர் நமசிவாயக்குருக்கள் பண்டிதர், நமசிவாயதேசிகர் பண்டிதர், பண்டிதர் வீரகத்தி, பண்டிதர் பொன் கணேசன், பண்டிதர் பரந்தாமன், பண்டிதர் கடம்பேசுவரன், பண்டிதர் சந்திரசேகரம், பண்டிதர் பொன்னையா, வித்துவான் நடராசா, பண்டிதமணி போன்றவர்களின் அன்பு அறநெறி செல்நெறி, கல்வயூடாக பரீட்சயங்களைப் பெற்றமை இவர் போன்ற மூன்றாம் கண் திறக்கப்பட்ட குருவருளால் கிடைத்தது அன்றோ. குருவருளால் அன்றோ திருவருள் கிட்டும்.

இவர் தம் சிவப்பேறு அமரத்துவம் எம்மை அமைதிக்குள் ஆக்குகின்றது.

அவர் தம் பாரியார், உறவினர்களுக்கு எம்அகமுக விழுமிய அன்பு பாராட்டுவது அன்றி அவர் ஆத்மா சாந்தியடைய என்று சொல்லுவர் புலவர் எனினும் குருவிடம் உள்ள ஆசை மேலிட அவர் ஆத்மா சாந்தியடைக என்று சொல்லும் தகமை இல்லா புல்லர் நாம்.

என்னும் குருவிடம் உள்ள ஆசை மேலீட்டால் அவர் தம் ஆத்மா சாந்தி அடைக என ஆன்ம உணர்வு உந்தலால் கூறுவோம்.

இங்ஙனம்  
அவர் தம் மாணாக்கன்  
திவ்யாதங்கன்  
பண்டிதர் வ. ஆ. தங்கமயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதநற் குருமணி
# பொன்னம்பலவாணர் பதம் பணிவோம்

1. நெற்றியிலே திருநீற்றின் ஒளிவிளங்க நீள்மார்பில்
பொருந்துநற் கண்டிகையும் பொலிந்திலங்கத் திருவாயில்
நற்கதிசேர் ஐந்தெழுத்தும் மந்திரமும் நின்றொலிக்கும்
அற்புதநற் குருமணிவோன் அம்பலவாணர் பதம்பணிவாம்.

2. நித்தமுமே சிவபூசை செய்திடுவீர் நின்கோயில்
அத்தனுக்கும் முப்போதும் பூசைசெய்தே தவமுயன்றீர்
சித்தாந்தம் திருமுறைகள் வேதாக மங்களிலே
வித்தகரே பொன்னம்பல வாணரீர்நின் பதம் பணிவோம்.

3. சைவத்தமிழ் பண்பாட்டின் திருவுருவாய் உலாவிவந்து
செய்வதெலாம் சிவப்பணியாய்ச் சிந்தையிலே நிறைவுகண்டு
உயர்ச்சிதரும் நற்கருத்துப் பெட்டகமாய் வாழ்கின்ற
வையகநற் பயனுறவே வாழ்ந்திட்டீர் மறவோமே.

4. செந்தமிழைக் கற்றுணர்ந்த பண்டிதர்கள் பரம்பரையில்
முந்துபுகழ்க் குரியவராய் முத்தமிழின் களஞ்சியமாய்
சிந்தனைக்கு விருந்தான பலநூல்கள் கட்டுரைகள்
தந்துதமழ் தழைத்திடவே செய்தபணி போற்றிடுவோம்.

5. பழமைக்கும் புதுமைக்கும் பாலமதாய்ப் பணிசெய்தே
பழந்தமிழ்நல் இலக்கணங்கள் இலக்கியங்கள் தமைப்புதிய
வளந்தருபற் பல்கலையின் வடிவினிலே தந்திட்டீர்
உளமார உங்கள்பதம் பணிந்தேநாம் போற்றுகின்றோம்.

சைவப்புலவர், கலாபூஷணம்
சு. செல்லத்துரை
இளவாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பேராசான் பண்டிதர். பொன்னம்பலவாணர்

மரபுவழி தமிழ் கல்வியை கட்டிக் காத்து இளைய தலைமுறையினரிடம் கையளிக்கும் பொறுப்பை அர்ப்பணிப்போடு நிறைவேற்றியவர் அமரர் பண்டிதர் திரு. பொன்னம்பலவாணர் அவர்கள்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் கீழத்தேயக்கல்விக் கல்லூரி போராலும், இடப்பெயர்சி யாலும் அலைப்புண்டபோதும், எங்கெங்கு பண்டித, பால பண்டித வகுப்புக்கள் நடந்தாலும் பொன்னாலையிலிருந்து வந்து, வேறிடங்களில் கற்க முடியாத பாடப் பரப்புக்களை ஊதியம் பெறாது போதித்த பணி காலம் மறக்க முடியாதது. முதுமையில் உடல் தளர்ந்த போதும், கடைசி வரை இப் பணியை அவர் செய்து வந்தார்.

தூய வெள்ளை உடை, நீறு பொலியும் நெற்றி, அறிவொளி வீசும் கண்கள், மாறாத புன்னகை- இவை பொன்னம்பலவாணரின் அடையாளங்கள். பழக இனியவர், அதிரப் பேசாதவர். ஆர்வத்தோடு தமிழ் கற்கும் இளையோருக்கு அவருடைய வழிகாட்டல் இனி இல்லை என்று எணணுங்கால் இதயம் கனக்கிறது.

சித்தி விநாயகரை மனம், மொழி, மெய்களால் வழிபட்டு வந்த பொன்னம்பலவாணரின் ஆத்மா அவன் பாதமலரை வண்டாய் மிழற்றியபடி சுற்றிக் கொணடிருக்கும் என்பதில் ஐயமில்லை.

கவிஞர் சோ பத்மநாதன்
உபதலைவர்
ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்துணையாம் அவர்போல அறிந்தே உரைக்க

## பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் B.Sc. M.A

(தமிழ்-சிறப்பு) விரிவுரையாளர் கீழைத்தேயக் கல்விக் கல்லூரி

பொலிவுறும் புன்சிரிப்பும் பெற்ற வனப்பும்
பெருக்கிய தன்னறிவும் பொருந்திய தாலே
நலிந்ததம் குறையுமெலாம் நாளும் நீக்க
நாற்றிசை யுமிருந்தே நண்ணி வந்தோர்
பொலிவுடன் மீளுதலைப் பேறே என்பீர்
போன னின் னுயிர்கண்டே புலியோர் கலங்கப்
பலியாகி விட்டீரே பாதை விபத்தால்
பாங்கறி நம்மனமும் பதைக்க லாச்சே.

சங்கத்தில் இருந்தேசெந் தமிழை வளர்த்தீர்
சால்புபெற மாணவர்க்குத் துணையாய் நின்றீர்
பங்கமிலாப் பேச்சுடனாம் பணிவுங் காட்டி
பண்புடையார் பாங்கறிந்தாய் பலரும் மெச்ச
பொங்குகடல் நீர்பரந்த பொன்னா லையூர்
பூரிக்க வாழ்ந்தோய் நும் பிறப்ப ததனால்
தங்குபுகழ் சங்கநூலாம் திறமும் தேர்ந்தே
தண்டமிழ்ப்பே ராசானாய்த் தொண்டன் ஆனாய்.

சைவஞ்சார் சாத்திரத்தால் சமயி யானாய்
சார்ந்த நற் புலமையினால் உரைகள் தந்தாய்
சைவநற் பேச் சுடனுறைந்து மறைகள் தேர்ந்து
சால்பனைத்து மோங்கத் தலைமை பெற்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமார்க்கம் வடமொழியாம் துணையே யாக
சாற்றிடும் பேச்சதனைக் கேட்குந் தோறும்
சைவத்தின் பெருமைதான் சுவையே நல்க
சேர்ந்திருந்தே யாவருந்தான் துய்க்க லாமே.

சித்திவிநா யகர்கோயில் சேர்ந்த குளமும்
சேர்ந்துநிரை யாய்வருமல் ஆவும் புள்ளும்
நித்தம்மகிழ் மலர்க்காவின் நெடுநல் மணமும்
நீர்க்கேணி நீளிரில்ஞ்சேர் மருத வளமும்
சித்தமதை ஈர்த்து நிதம் சேர்க்கும் எம்மை
சிந்தைகொள் நற்பொருளைச் சிறப்பாய் மீட்க
சிந்தைகொள் நற்பொருளைச் சிறப்பாய் மீட்க
அத்தனையும் போனதேரும் அன்பன் பிரவால்
ஆர்துணையாம் அவர்போல அறிந்தே உரைக்க.

சிந்துபுரம்,
வட்டுக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்கள் காட்டிய சிவநெறியாளன்

பூவ லந்தொழும் புண்ணிய மாதவன்
நாவ லன்மலை யூறிய நன்னதி
மேவி யுண்டவர் தோய்ந்தவர் மெய்த்திறம்
நாவு மோங்கிட நாமினிப் பேசுவாம்.

-ஈழத்துச் சிதம்பர புராணம்.

நல்லைநகர் ஆறுமுகநாவலர் என்ற மலையில் ஊறிய நல்ல ஒழுகலாறை அடைந்து அந்நீரை உண்டவர்களும், அதிலே மூழ்கியவருமாகிய சைவச் சான்றோர்கள் வாழ்ந்த பூமி யாழ்ப்பாணம் ஆகும். அச்சைவச் சான்றோர் வரிசையில் தோன்றி, சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தில் தனது ஆளுமைத் தடங்களைப் பதித்தவரே அண்மையில் சிவபதம் எய்திய சைவப் பெரியார் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் ஆவார்.

மேலும் நாவலர் ஒழுகலாறில் மூழ்கியவரில் ஒருவரான காரைநகர் வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களுக்கும் எனக்கும் இருந்த தொடர்பும், ஈழத்துச் சிதம்பர ஆலயச் சூழலும் என்னையும் சைவநெறிப் பழக்க வழக்கங்களில் ஈடுபட வைத்தது. குருக்கள் ஐயாவும் பண்டிதர் ஐயாவும் எனது சில சைவப் பணிகளுக்கு வழிகாட்டி நெறிப்படுத்திய பெருந்தகைகள் ஆவார்கள்.

2008 ஆம் ஆண்டு காரைநகர் ஈழத்துச் சிதம்பர உட்பிரகார சுற்று மண்டப வேலைகளுக்காகத் திருப்பணிச் சபை ஒன்று அமைக்கப்பட்டது. செயலாளராக அடியேனைத் தெரிவு செய்திருந்தனர்.திருப்பணி வேலைகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற பொன்னாலை பண்டிதர் தி. பொன்னம்பலவாணரிடம் செல்லுங்கள் என என்னை அவருக்கு அறிமுகப்படுத்தி வழிகாட்டியவரே மூதறிஞர் வைத்தீசுவரக்குருக்கள் ஐயா அவர்கள்.

அன்று தொடக்கம் ஆலயத் திருப்பணி வேலைகள் தொடர்பான ஆலோசனைகள், சந்தேகங்கள், சிவாகம விளக்கங்கள் என்பவற்றை எனக்கு அவ்வப்போது பண்டிதர் ஐயா வழங்கி வந்தார்.

இத்திருப்பணி வேலைகளின் போது ஈழத்துச் சிதம்பர ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவமூர்த்திகளுக்கென ஒரு தனிக் கோவில் அமைக்கப்பட்டது. ஆனால் பண்டிதர் ஐயா அவர்கள் ஓர் ஆலோசனையை வழங்கினார். அதாவது ஆலயத்தின் மூல மூர்த்தியான ஆண்டிகேணி ஐயனாரின் உற்சவ மூர்த்தியை மட்டும் ஐயனார் கோவிலிலேயே எழுந்தருளச் செய்யுமாறு ஆலோசனை வழங்கினார். அது இன்றும் எனது உள்ளத்தில் ஞாபகத்தில் உள்ளது. அவர் ஆலொசனைப்படியே ஆதீன கர்த்தாக்களும் ஐயனார் உற்சவ மூர்த்தியை ஐயனார் கோவிலுள்ளேயே எழுந்தருளச் செய்தனர்.

ஈழத்துச் சிதம்பர புராணம் மறுபதிப்புச் செய்த போது அச்சுப்பிரதிகள் முழுவதையம் பிழையின்றி சரவை (Proofs) பார்த்து உதவியவர். இதனைச் சரவை பார்த்ததன் மூலம் இப்புராணம் படிக்கும் சந்தர்ப்பம் தனக்கு ஏற்பட்டதையும் அடிக்கடி கூறுவார்.

பண்டிதர் ஐயாவுடன் நான் பழகிய காலத்திலிருந்தே என்னால் அவரிடம் காணப்பட்ட பல சைவப் பண்புகளை அறியக் கூடியதாக இருந்தது. குறிப்பாக தனது விநாயகராலயப் பூசை நேரங்களின் போது, என்ன வேலைகள் இருப்பினும் அதை விடுத்து, அவ் ஆலயப் பூசையை கண்ணும் கருத்துமாகச் செய்து வருவார். புராணபடனம் மற்றும் சைவ விரதங்கள், சைவப்பாரம்பரியங்கள் என்பவை அடுத்த பரம்பரைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற சமூக நோக்கு அவரிடம் என்றும் குடி கொண்டிருந்தது. தன்னை நாடி சந்தேக நிவர்த்திக்காகவும், ஆலோசனைகளைப் பெறுவதற்காகவும் வரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு சிறந்த தெளிவுதரு விளக்கங்களை பகிர்ந்து கொண்டவர்.

பல்வேறு வகையான சமயக் கட்டுரைகள், நூல்கள் என்பவற்றை எழுதிய பண்டிதர் ஐயா அவர்கள் ஒரு காலம் 'ஈழநாடு' தினசரிப் பத்திரிகையின் பத்திராதிபராகவும் சேவையாற்றியவர். பெயரையோ புகழையோ விரும்பாது, இலைகளினால் மறைக்கப்பட்ட பழம் பெருத்து பழுத்த பழமாக விளங்குவது போன்று சைவத்திலும், தமிழிலும் ஒரு பழுத்த பழமாகத் திகழ்ந்தார்.

சிறந்த சமயப் பிரசங்கியாக ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் சமயக் கருத்துக்களை எடுத்துக் கூறியவர். திருமுறைகள், சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்தம் என்பவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தோற்றத்தாலும், வாழ்வியலாலும் சிறந்த சைவச் சான்றோராக விளங்கிய பண்டிதர் ஐயா அவர்கள் நாவலர் வழியில் சைவப்பணி, தமிழ்ப்பணி, நூல் வெளியீட்டுப் பணி, சைவசமயப் பிரசாரப்பணி என்பவற்றில் தனது ஆளுமைத் தடங்களை முழுமையாகப் பதித்துக் கொண்டவர்.

சைவசமயத்தினருக்கு ஒரு சிறந்த ஆலோசகராக, சந்தேக நிவர்த்தியாளராக, சைவ உலகுக்கு ஒரு ஞானசூரியனாகத் திகழ்ந்த பண்டிதர் ஐயாவின் திடீர் மறைவு சைவத் தமிழ் உலகுக்கு ஒரு பேரிழப்பாகும். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பொன்னாலை சித்தி விநாயகப் பெருமானையும், வரதராசப் பெருமாளையும் பிரார்த்திக்கின்றேன்.

"சைவத்தமிழ் உலகுக்கு ஓர் அணிகலனான
பண்டிதர் ஐயாவின் புகழ் ஓங்குக"

வே. சிவகுருநாதன்
சடையாளி
காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுப் பொக்கிசம் பண்டிதர் வாணர் ஐயா

மறைந்த அமரர் பொன்னம்பலவாணர் அவர்கள் எனது மாமாவின் மகனாவார். அவர் பற்றி நான குறிப்பிடுவது தற்பெருமையாக தோன்றினாலும் சில விடயங்களைக் குறிப்பிடுவது பொருத்தம் என நினைக்கின்றேன்.

அவரது வாழ்வு, வாழ்க்கை முறை ஒரு வகையான துறவறத்தை போன்றதா கும். சாதாரண வாழ்வில் இணைந்திருந்தாலும் அவர் பிள்ளையாருக்கே தன்னை அர்ப்பணித்திருந்தார். சமூகத்துடன் ஒட்டி உறவாடினாலும் அவரது எண்ணம், செயல், வாழ்வு பிள்ளையாரை மையப்படுத்தியே அமைந்திருந்தது. சிறு வயது, பள்ளிப்பருவம், இளமைப்பருவம், வேலை (தொழில்) இல்லறம் இவை யாவுமே பிள்ளையாரையும் கோவிலையுமே அனுசரித்து வாழ்ந்தார். தற்காலத்தில் பழமை, ஆசாரம், கோவில் ஒழுங்கு பேணுவது நடைமுறையில் மிகவும் சிரமமாகும். அவற்றை எல்லாம் வென்று வாழ்ந்து காட்டினார். பரம்பரை வழி நின்று பணி செய்தார்.

அவரது பரம்பரை சைவ மரபுகளை இறுக்கமாக கடைப்பிடிக்கும் குடும்பமாகும். வருமானத்திற்கு, தொழிலுக்கு அல்லாமல் ஆன்ம ஈடேற்றத்திற்கு முதன்மை கொடுப்பவர்கள். பூந்தோட்டம் அமைத்து பல வகையான பூக்களை விதிமுறைக்கமைய பறித்து பிள்ளையாருக்கும் பெருமாளுக்கும் சாத்தி மகிழ்வார்கள். பூப்பறிக்கும் போது நோயுற்ற பூ, பழுதுபட்ட பூ, முழங்காலுக்கு கீழ்ப்பட்ட பூக்கள் என இப்படி பல விதிமுறைகளைக் கடைப்பிடிப்பார்கள். சுவாமிக்கு நெய்வேத்தியம் செய்யக்கூடிய உணவையே உண்பார்கள். இது போன்ற முழுமையான ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்து வந்தார்கள். கோவில் பூசை நடவடிக்கைகளின் போது நாம் சற்று ஆசாரக் குறைவாக இருப்பின் எம்மை தொடக்கூட மாட்டார்கள். இது போன்ற பல ஒழுங்கு முறைகளை இவரும் தன் வாழ்வில் கடைப்பிடித்து வந்தார். இதனால் இவர் எல்லாராலும் கௌரவிக்கப்படுபவராக இருந்தார்.

மேலும் இவர் கோவில் வழிபாட்டுடன் மட்டுமல்லாது சைவத்தையும், தமிழையும் வளர்க்கும பணியிலும் ஞானச்சுடர் போன்ற பத்திரிகைகளில் தற்போது வரை இவரது கட்டுரைகள் வெளிவந்துகொண்டிருந்தன. அறிவு வளர்ச்சி கழகத்தை நிறுவி தலைமை தாங்கி சமய வளர்ச்சிக்கு பாடுபட்டார். கந்தபுராண சபையின் ஆலோசகராகவும் இருந்தார். சமயம் சார்ந்த விளக்க நூல்கள் பல எழுதினார். அத்துடன் அவ்வப்போது சந்தேகம் கேட்டுவரும் க.பொ.த உயர்தர மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். புராணங்களுக்கு பயன் சொல்வதில் வல்லவராக இருந்தார். யோகி கார்த்திகேசு அவர்களின் நன்மதிப்பைப் பெற்று அவருக்குப்பின் அந்த இடத்தை நிரப்பினார். வள்ளுவரின் கூற்றைப் போல் கற்றுக்கொண்டே இருப்பது இவரது பொழுதுபோக்காகும். தமிழ் அறிவையும், ஆன்மீக அறிவையும் இறுதிவரை வளர்த்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமின்புறுவது உலகின் புறங்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

- திருக்குறள்

தாம் இன்பம் அடைவதாகிய கல்வியினாலே உலகத்தாரும் இன்பமடைவதைக் கண்டு கற்றறிந்நதவர் மேன் மேலும் தாம் கற்பதையே விரும்புவார்கள். இவ்வாறே அவர் இறுதிவரை கற்று மற்றையோருக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தார். பழைய காலத்து நூல்களில் இருந்து இற்றைவரையுள்ள நூல்களை வாசித்து பல விடயங்களில் தெளிவு பெற்றிருந்தார். தேவையேற்படுமிடத்து ஏனையோர்களிடமும் கதைத்து அலசி ஆராய்ந்து தெரிந்து கொள்வார். ஒரே விடயத்தை பல கோணங்களில் பல நூல்களில் இருந்தும் பெற்று பொருத்தமான விடையை சிந்தித்து தேர்ந்தெடுப்பார். அதன் சாரம் ஏனையோருக்கும் சுலபமாக் கிடைக்க வழி செய்வார். கற்றல் ஆர்வமுடைய முதியவர் கூட்டமொன்று இவரை எப்போதும் சுற்றியிருக்கும். வாரத்தில் ஒரு நாளாவது நல்லூரில் இவர்கள் சந்திப்பது வழக்கமாக இருந்தது. தமிழறிவு, ஆன்மீகம் போன்றவற்றில் தேடல் உள்ளவர்கள் இவரை சந்தித்து பயன் பெறுவர். இதைவிட மனம் நொந்து மனம் அமைதி இழந்தவர்கள் இவரச் சந்தித்து ஆறுதல் பெற்று மன அமைதியுடன் செல்வார்கள். கந்தபுராணம், இராமாயணம், பாரதம், நாயன்மார் வாழ்க்கை இப்படி பலவற்றில் இருந்து உதாரணங்களைக் கூறி ஆறுதல்படுத்துவார். நாட்டின் பல பாகங்களில் இருந்து இவரை தேடி பலர் வருவார்கள். பெரியவர், சிறியவர், ஜாதி சமய வேறுபாடின்றி அவர்களுக்கான எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வார். அறிவுக்கும் மனதிற்கும் ஆசிரியராகவும் வைத்தியராகவும் இருந்தார்.

புராணங்களுக்கு பயன் சொல்வதில் விற்பனராக இருந்தார். சுழிபுரம் குரபூசை மடத்தில் யோகி காத்திகேசு அவர்களிடத்தில் ஆரம்பித்த பயன் சொல்லும் பணியை பின் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், சுழிபுரம் கதிர்வேலாயுத சுவாமி கோயில், நல்லை ஆதீனம் போன்ற மற்றும் பல இடங்களிலும் விஸ்தரித்தார். பயன் சொல்லும் முறை, விளக்கம், வாயில் இருந்து வரும் தொடர் உரை வியக்கத்தக்கது. இவரது உரைக்காகவே அடியார்கள் காத்திருப்பர்.

இவரது சகல ஆளுமைகளையும் தெரிந்து கொண்ட அந்தந்த துறையினர் இவரை கௌரவித்து பட்டங்கள் வழங்கினார்கள். பல்கலைக்கழகம், அகில இலங்கை புலவர் சங்கம், துர்க்கா சபை, நல்லை ஆதீனம், சைவ சித்தாந்த கழகம், சந்நிதியான் ஆச்சிரமம் இப்படிப்பல இவற்றுள் அடங்கும். சமாதான நீதவானாகவும் கௌரவிக்கப்பட்டார். ஆனாலும் இவைகள் எவையும் இவருக்கு பெரிதாக படவில்லை. இவருக்கு இவற்றில் அக்கறையும் இருக்கவில்லை. எமது வற்புறுத்தலாலேயே இவற்றையும் ஏற்றுக்கொண்டார்.

சுழிபுரம் அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் இன்று வரை குருபூசைகள் நடத்தப்படுவதற்கு இவரே காரணமாக இருந்தார். நாயன்மார்களின் பெருமையை யாவருக்கும் உணர்த்தி அவர்களை வரவழைத்து புராணங்களை உணர்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இந்தியாவிற்கு பல தடவைகள் சென்று வந்தார். அங்கு பல பெருமை சேர் ஆதீனங்களுடன் தொடர்பாக இருந்தார். அங்குள்ள ஆன்மீக அன்பர்பகளுக்கு விளக்கம் சொல்லும் அளவிற்கு, அவர்கள் இவரை கௌரவிக்கும் அளவிற்கு அறிவு பெற்றிருந்தார். நான் வருடம் தோறும் இந்தியாவிற்கு தல யாத்திரை செல்வதுண்டு. போகும் போது அவர் அவ்விடத்து சிறப்புக்களை விலாவாரியாக எடுத்துரைப்பார். அதன் வழியே நானும் சென்று அதனுடைய முழுப்பயனையும் அனுபவிப்பதுண்டு. அவர் போகாத இடங்களுக்கு கூட அதை வாசித்து அறிந்து என்னை போகும்படி கூறுவார். நான் வந்து அனுபவங்களை கூறும் போது தானே போனமாதிரி உணர்வார். இவ்வாறு பல வழிகளிலும் பலருக்கும் வழிகாட்டியாக இருந்தார். சைவத்தின் வழி, ஊரின் வழி, குடும்பத்தின் வழி நின்று வாழ்ந்து மறைந்தார்.

ஆன்மீக அறிவு, நாட்டம் குறைந்த தற்காலத்தில், காலத்திற் கு தேவையான ஒருவரை, வழிகாட்டியை ஒரு அறிவுப்பொக்கிஷத்தை நாம் இழந்து விட்டோம். அவரது ஆன்மா சாந்தி பெறட்டும்.

சி.சிவகணேசசுந்தரன்.
(ஓய்வுநிலை அதிபர்,
யா/வட்டு இந்துக்கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எங்கள் பொன்னம்பலவாணர்

"வாணர்" ஐயா என்றவுடன் அமைதியும் சாந்தமும் நிறைந்த முகத்தில், நெற்றியில் திருநீறும், புருவமத்தியில் பெரிய சந்தனப் பொட்டும் அணிந்து வெள்ளை வேட்டி சால்வையுடன் ஒருவர் நம் கண் முன்னே தோன்றுவார். அவர் தான் "வாணர்" ஐயா. அவர்தான் பொன்னாலைப் பண்டிதர் பொன்னம்பலவாணர் அவர்கள்.

எங்கள் ஊரில் பொதுவாக எல்லோரும் அவரைப் பிரியமாக "வாணர்" ஐயா என்றுதான் அழைப்பது வழக்கம். பொன்னாலைப் பிள்ளையார் கோயில் உரிமையாளரும், நிர்வாகியும், அர்ச்சகருமான எங்களுடைய பெரியமாமா திரு. பொன்னுத்துரை தியாகராசா அவர்களுக்கும் காமாட்சி அவர்களுக்கும் முதலாவது பிள்ளையாகப் பிறந்தார்.

அவருடைய தாயார் இரண்டாவது குழந்தையைப் பிரசவிப்பதற்காக தனது தாயார் வீட்டிற்குச் சென்றிருந்த காலப்பகுதியில் பொன்னம்பலவாணர் பெரும்பாலும் இரவுபகலாக எங்களுடைய விட்டிலேயே தங்குவார். அந்தச் சந்தர்ப்பத்தில் எங்களுடைய வீட்டிலே என்னுடைய அண்ணையும் நானும் மட்டும் தான் பிள்ளைகள். என்னுடைய தம்பி தங்கைகள் எவருமே அப்பொழுது பிறந்திருக்கவில்லை. எனக்கும் பொன்னம்பலவாணருக்கும் இடையே மூன்று வயது வித்தியாசம். எங்களுடைய வீட்டிலே வேறு சின்னப்பிள்ளைகள் எவரும் இல்லையென்றபடியால் எங்களுடைய அம்மா அவரைப் "பத்திரமாகப்" பார்த்துக் கொள்ளுவார் என்ற நம்பிக்கையில் அவரை எங்களுடைய அம்மாவின் பொறுப்பில் வளரவிட்டார்கள். என்னுடைய அண்ணனுக்கும் எனக்கும் நல்ல ஒரு தம்பி வந்து விட்டான் என்று மிகவும் மகிழ்ச்சி. நாங்கள் சொந்தச் சகோதரங்கள் போல் மிகவும் பாசத்துடன் பழகினோம். எனவே அவர் தங்களுடைய வீட்டில் மட்டுமல்ல. எங்கள் வீட்டிலும் அனைவருக்கும் செல்லமாக வளர்ந்தார்.

அவருடைய தாத்தா திரு. பொன்னுத்துரை அவர்கள் அதிகாலை எழுந்து பசுவிலே பால் கறந்து கோப்பி தயாரித்து தானும் குடித்து, தன்னுடைய பேரனுக்கும் ஒரு "மூக்குப் பேணியில்" எடுத்துக் கொண்டு வந்து முன் வீட்டில் இருக்கும் அம்மாவை "அன்னம்மா அன்னம்மா" என்று கூப்பிட்டு தெருவோரம் இருக்கும் "வேலிப் பொட்டு" வழியாக அம்மாவிடம் கொடுத்து "இதைத் தம்பிக்கு பருக்கி விடு" என்று சொல்லி கொடுத்து விட்டுப் போவார். அம்மாவும் அதன்படியே தனது செல்லக் குட்டி மருமகனை எழுப்பிப் பருக்கி விட அவரும் வாங்கிக் குடித்து விட்டு மறுபடியும் நித்திரையாகி விடிந்தபின் எழும்புவார். அனைவருக்கும் செல்லப்பிள்ளை என்றாலும் தகப்பனாரின் கண்டிப்பும் ஓரளவு இருந்தமையினால் உத்தம புத்திரனாக வளர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பிலே சிறந்து விளங்கினார். அவர் பிறந்து வளர சூழலுக்கு ஏற்றவாறு இயல்பாகவே அவருக்கு தமிழிலும் சைவசமயத்திலும் ஆர்வம் இருந்தது. எனவே நன்றாகத் தமிழ் படித்து பண்டிதர் ஆனார். கமஸ்கிருதத்திலும் கற்றறிந்து பூசை செய்வதிலும் வல்லவரானார்.

நவநாகரிகத்தில் அதிகம் நாட்டமில்லாதவர். அதனால் தனது முந்தையோரைப் போலவே தனது நடை உடை பாவனைகளையும் வாழ்க்கை முறையையும் அமைத்துக் கொண்டார். எப்பொழுதும் வெள்ளை வேட்டி சால்வைகள் தான் அணிந்திருப்பார். வீட்டில் இருக்கும் பொழுதும் சரி, வேறு நிற ஆடைகள் அணிவதேயில்லை. வேலைத்தலத்துக்குப் போய் வருகின்ற வேளைகளில் மட்டும் மேற் சட்டை அணிந்து கொள்வார்.

தனது தந்தையாரைப் போலவே அவரும் தனது நாளாந்த வேலைகளை நியமந் தவறாமல் செயதுமுடிப்பார். அதிகாலை எழுந்து தனது காலைக் கடன்களை முடித்து நீராடி நேரந்தவறாமல் பிள்ளையாருக்கும் பூசைகள் செய்வார். பூசைகள் நிறைவேற்றிய பின், அர்ச்சனைகள் செய்வதற்காகவும், மாலைகள் தொடுப்பதற்காகவும் பூக்கள் கொய்து வருவதற்காக தென்னோலையினால் இழைக்கும் பட்டை பூக்கூடையைக் கையிலே எடுத்துக் கொண்டு பூக்கள் ஆய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் "கெவர்த்தடியை" (அதற்கென ஒரு பெயர் இருக்கிறது. இப்பொழுது மறந்து போனேன்). எடுத்துக் கொண்ட பிள்ளையார் கோயிலுக்கு முன்புறம் இருக்கின்ற பூந்தோட்டத்துக்குச் செல்வார். பூக்களைக் கொய்யும் பொழது அவரது வாய் தேவாரதிருவாசகங்களை எதையாவது முணுமுணுத்துக் கொண்டேயிருக்கும்.

இது அவரது தாயாரிடமிருந்து அவருக்கு வந்த பழக்கம். அவரும் தனிமையிலே வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதெலாம் தேவார திருவாசகங்களை எதையாவது இலேசாக முணுமுணுத்துக் கொண்டே தான் இருப்பார்.

வாணர் ஐயா அவர்கள் மிகச்சிறப்பாக ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார். அனைவரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் மிகவும் எளிமையாகப் பெசுவார். அறிஞர்களும் வியந்து போற்றும் வண்ணம் நல்ல நல்ல கருத்துக்களைச் சொல்லுவார். மிகவும் சிறப்பாகப் பேசும் ஆற்றல் உடையவர் என்பதால் சைவசமய சம்பந்தமான விழாக்கள், தமிழர் திருநாட்கள் கொண்டாடப்படும் இடங்கள், கோயில் திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளில் எல்லாம் அவரைச் சொற்பொழிவாற்ற அழைப்பார்கள். தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதற்காக தன்னுடைய கல்வியையும் அறிவையும் நன்கு பிரயோசனப்படுத்தியவர்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்கின்ற வாக்கியத்தை நன்கு மனதிலே பதிய வைத்து அதன்படி வாழ்ந்தவர். வாழ்ந்து காட்டியவர். அன்பினால் எல்லோரையும் கட்டிப்போட்டிருந்தவர். ஆகையினால் மற்றையவர்களும் அவர்மீத அன்பைச் சொரிந்த வண்ணம் இருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் கோயிலையும் சிறப்பாக நிர்வகித்தவர். அவருடைய தாத்தாவைவிட அவருடைய தகப்பனாரும், தகப்பானாரைவிட வாணர் ஐயா அவர்களும் கோயிலை சிறப்பாக நிர்வகித்து முன்னேற்றப் பாதையில் கொண்டு வந்துள்ளனர். முன்பெல்லாம கோயிலிலே பூசைகள், விழாக்கள் எல்லாம் நியமந் தவறாமல் ஆகம விதிப்படி மிகச்சிறப்பாக நடைபெற்றன என்றாலும் வாணர் ஐயாவின் நிர்வாகத்திலே தான் வருடம் ஒருமுறை கொடியேற்றத்துடன் திருவிழாக்கள் ஆரம்பமாகி தேர், தீர்த்தத்துடன் நிறைவு அடையும வகையில் ஆரம்பிக்கப்பட்டது.

திரு. பொன்னம்பலவாணர் அவர்கள் தன்னைப் போலவே தன்னுடைய தம்பி தங்கைகள், மருமக்கள் அனைவரையும் சிறுவயதிலிருந்தே பக்திமார்க்கத்தில் ஈடுபடுத்தியவர். அவருடைய ஒரேயொரு அன்புத்தம்பி அருண்மொழித்தேவர் என்கின்ற அருள் சிறுகுழந்தையாக இருந்த பொழுதே அவருக்குத் தினந்தோறும் "விநாயகர் அகவல்" சொல்லிக் கொடுத்தார். அதனால் அருள் இரண்டு வயதுப் பாலகனாக இருந்த பொழுதே "விநாயகர் அகவல்" மனனஞ்செய்து மழலை வாயால் ஒப்புவிப்பான். அதனைக் கண்டு நாங்கள் பெரு வியப்படைந்து திருஞானசம்பந்தர் தனது மூன்றாவத வயதில் தேவாரம் பாடியதெல்லாம் ஒரு பெரிய சாதனை அல்ல என பேசிக்கொள்வதுண்டு. உண்மையைச் சொல்லப் பொனால் அன்றிலிருந்து தான் நான் "விநாயகர் அகவல்" மனனஞ் செய்யத் தொடங்கி அன்றில் இருந்த இன்றுவரை காலையில் எழுந்து குளித்து பிள்ளையாரை வணங்கி "விநாயகர் அகவல்" பாடிய பின்பு தான் முருகனை, ஸ்ரீமத் நாராயணனை எல்லாம வணங்குவதை நியமமாகக் கொண்டுள்ளேன்.

திருமதி இராஜலட்சுமி விஜயசூரியர்
கியூபெட், கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

# மனிதருள் மாணிக்கம்

பொன்னாலை கலசெட்டியவத்தை சித்திவிநாயகர் தந்த அற்புத அறிவாளர் சிவத்தமிழ் பண்டிதர் பொன்னம்பலவாணர் ஐயா அவர்கள். இவர் சித்தி விநாயகர் கோயில் நிர்வாகியாகவும், அர்ச்சகருமாகவும் திகழ்ந்தார். பிள்ளையாரின் நித்திய பூசை வழிமுறைகளை ஒழுங்காக நிறைவேற்றி வந்ததுடன் நேரம் தவறாது காலை மாலை பூசை செய்வார். ஆசார விதிமுறைகளை மிகவும் நுணுக்கமாக நிறைவேற்றி வருவார். அத்துடன் இங்கு வரும் பக்தர்களிடமும் அதையே எதிர்பார்ப்பார். அவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்தார்.

பாசம் நிறைந்த ஐயா அவர்கள் பத்திரிகை ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் பல நூல்களுக்கு பயன் சொல்பவராகவும் பல மாணவர்களின் அறிவுத் தேடல்களுக்கு வழிகாட்டியாகவும் ஊரவர்களுக்கு அறிவுச் சுடராகவும் தனது உறவினர்களுக்கு முன்மாதிரியாகவும் திகழ்ந்தவர்.

ஐயா அவர்கள் தனது வாழ்க்கை பயணத்தை பிள்ளையாரின் பாதங்களில் சமர்ப்பித்து வாழ்ந்ததாலோ என்னவோ எந்த நேரத்திலும் அமைதியாகவும் பரபரப்பு இல்லாமலும் நல்ல மனநிலையில் இருப்பவராக காணப்படுவார். அதனால் எல்லோர் மனங்களிலும் ஆத்மீக அமுதசுரபியாக காணப்பட்டார்.

ஒவ்வொரு பிள்ளையார்கதை முடிந்த பின்பும் ஐயாவின் வாயிலிருந்து எல்லாம் நல்லபடியாக சிறப்பாக நடந்தது என்று சொல்லுவார். அந்த வார்த்தை பிள்ளையாரின் வாக்கு என்ற திருப்தியுடன் வீடு செல்வோம். ஐயா அவர்களுக்கு கோபுர கும்பாபிஷேகம் கனவாகவே இருந்தது. அதை பிள்ளையாரின் துணையுடன் சிறப்பாகவே நடத்தி மகிழ்ந்தார்.

மனிதருள் மாணிக்கமாக திகழ்ந்த ஐயா அவர்களின் ஆத்மா சிவத்தில் கலந்தாலும் அவரின் ஆசி வேண்டி நிற்கிறோம். ஐயாவின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு பிரதோஷ நாயகனின் பரிபூரண கடாட்சம் கிடைக்க வேண்டி நிற்கின்றோம்.

பிள்ளையார் கதை
உபயகாரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் பண்டிதர் திரு. தி. பொன்னம்பலவாணர் ஐயாவின் வாழ்க்கைச் சுருக்கம்

பொன்னம்பலவாணர் ஐயா அவர்கள் பொன்னாலையைச் சேர்ந்த தியாகராஜா ஐயாவிற்கும், காமாட்சி அம்மாவுக்கும் மூத்த மகனாக 16.10.1945 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு மங்கையற்கரசி, ஞானாம்பிகை, வடிவாம்பிகை ஆகிய மூன்று சகோதரிகளும், அருண்மொழித்தேவர் என்ற ஒரு சகோதரனும் உள்ளனர்.

ஐயா அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலையிலும், உயர்கல்வியை யாழ் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் கற்றார். தொடர்ந்து தமிழ் பண்டித வகுப்பு சென்று தமிழ், சைவ சித்தாந்தம் போன்றவற்றில் மிகுந்த தேர்ச்சி பெற்றார். பண்டிதர் வகுப்பு மூலம் யாழ் மண்ணின் தமிழ் பேரறிஞரும், பண்பாளருமான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுடனும் மற்றும் பல அறிஞர்களிடமும் மாணாக்கராகவும், அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவராகவும் திகழ்ந்தார். அவரின் சித்தப்பாவான வித்துவான் பொன் முத்துக்குமாரன் அவர்களது தமிழறிவும், வழிகாட்டுதல்களும் வாணர் ஐயாவிற்கு பெரிதும் உதவியது என்றால் மிகையில்லை. பண்டிதராக ஐயா தேர்ச்சி பெற்ற பின் ஈழநாடு பத்திரிகையில் நீண்ட காலம் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். 1980களில் ஆரம்பத்திலிருந்து அந்த அலுவலகம் அசம்பாவிதத்தால் பாதிக்கப்படும் வரை தனது பணியை தொடர்ந்தார்.

ஐயா அவர்களுக்கு 1986ஆம் ஆண்டு கந்தர் மடத்தைச் சேர்ந்த கனகசபாபதி புவனேஸ்வரி அவர்களுடன் திருமணம் நடந்தேறியது. அதன் பின் 1996 வரை அவர் தனது தந்தையார் தியாகர் ஐயாவின் மறைவு வரை கந்தர்மடத்தில் இருந்த தனது வீட்டில் இருந்து தமிழ் மற்றும் சமயப் பணிகளைத் தொடர்ந்து வந்தார். தனது தந்தையாரின் மறைவின் பின் தானே முழுமையாக பொன்னாலை சித்தி விநாயகர் ஆலயத்தின் பரம்பரை வழியாக வந்த நிர்வாகப் பொறுப்பையும், பூஜைப் பொறுப்பையும் உரிமையாக ஏற்று சிறப்பாக செய்து வந்தார். அன்றிலிருந்து ஐயா விபத்துக்குள்ளான 20 மார்ச் மாதம் 2021 வரை தினமும் தனக்கேயுரிய ஆத்மார்த்த பூஜையாகிய சிவபூஜையையும், பிள்ளையாருக்கு காலையும் மாலையும் செய்ய வேண்டிய பூஜைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரமமாகச் செய்து வந்தார். ஐயா ஆசார அனுட்டானங்களில் மிகவும் தவறாத ஒழுக்க சீலர்.

தனது பூட்டன், பேரன் காலத்திலிருந்து பல தலைமுறைகளாகப் பொன்னாலை வரதராஜப்பெருமாளுக்கு ஓதுவார்களாக இருந்து வந்த பணியையும் சிரம் மேற் கொண்டு திருவாய் மொழி, திருப்பாவை, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகிய நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களை உற்சவ காலங்களில் அங்கு சென்று பக்தியோடு பாடுவார். காலம் காலமாகப் பொன்னாலைக் கோயிலில் பணியிலிருந்து வரும் அந்தணப் பெருமக்கள் மேல் ஐயா பெரும் மதிப்பும் அபிமானமும் கொண்டிருந்தார். அதற்கு சற்றும் குறைவின்றி அவர்களும் வாணர் ஐயாவுடன் மிகுந்த மரியாதையோடும் அன்போடும் பழகி வந்தனர்.

சிவனும் அரியும் ஒன்று என்பதை தன் வாழ்வில் வாழ்ந்து காட்டியவர் ஐயா அவர்கள். தினமும் சிவபூசை செய்யும் ஒருவராக இருந்த போதும் ஸ்ரீமன் நாராயணன் மீதும் அளவற்ற பக்தியும் அபிமானமும் கொண்டிருந்தார்.

யாழ் நல்லை ஆதீனம், சிவதொண்டன் நிலையம், ஆலவாய் ஆச்சிரமம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானம், மற்றும் பல சமய நிறுவனங்கள், பெரியோர்களுடன் ஐயா அவர்கள் தமது தொடர்பை நீண்ட காலமாகப் பேணி வந்தார். அதுமட்டுமன்றி பல ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பிற நிகழ்வுகளில் அவ்வப்போது சொற்பொழிவுகள் நிகழ்த்தி ஏனைய மக்களும் தமிழ், சைவசமயக் கருத்துக்களை அறிந்து தெளிவு பெற பேருதவி செய்தார்.

சுழிபுரம் அறுபத்து மூவர் குருபூசை மடத்திலும் ஏனைய பல கோயில்களிலும் புராண படனங்களுக்கு பயன் சொல்பவராகவும், அடியவர்களைப் போற்றுபவராகவும் திகழ்ந்தார்.

தனது முதுமைக் காலத்தில் பொன்னாலைப் பிள்ளையார் கோவில்ப் பொறுப்புக்களை சிறிது சிறிதாக தனது மருமக்களான கணேதீஸ்வரனுக்கும், ஜெகதீஸ்வரனுக்கும் கொடுத்திருந்தார். இன்று அவர் மறைந்து விட்ட சூழலிலும் சகோதரியின் மூத்த மகனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேதீஸ்வரன் அவர்கள் கோவில் நிர்வாகம், பூஜை என்பவற்றை இலகுவாகப் பொறுப்பேற்க ஐயாவின் வழிகாட்டுதல்களே பெரிதும் உதவின என்றால் மிகையல்ல.

தனது வாழ் நாள் சுருங்குகிறது என்ற முன் அறிவினாலோ என்னவோ அவசர அவசரமாக பிள்ளையார் கோவிலின் குடமுழுக்கையும் 2020 ஆம் ஆண்டு ஆவணியில் கொரோனா அச்சங்களுக்கு மத்தியிலும் சிறப்பாக நிறைவேற்றியிருந்தார். அவரது வயது முதிர்ந்த நோயாளியான தாயார் மீதும் அளவற்ற பாசத்தோடும், பக்குவத்தோடும் இருந்து வந்தார். வாணர் ஐயாவிற்கு பாரத நாட்டின் மீதும் அங்குள்ள ஆலயங்கள், அருளாளர்கள் மீதும் அளவற்ற பக்தி உண்டு. இதன் வெளிப்பாடாகப் பல தடவைகள் (20 இற்கு மேற்பட்ட) அங்கு தல யாத்திரைகள் மேற்கொண்டிருந்தார். ஒரு தடவை காசி வரை சென்று தன்னுடைய பிறவிக் கடன்களைக் கூட நிறைவேற்றியிருந்தார். இதன் மூலம் மனதில் அடுத்த பிறவியை அறுத்த நிம்மதியுடன் இப்போது இவ்வுலகை விட்டு நீங்கியுள்ளார்.

இப்பேற்பட்ட ஓர் அருளாளர் விதியின் வசத்தால் காலனுக்கு ஒரு காரணம் தேவைப்பட்டது போல யாழ் காங்கேசன்துறை வீதியை மோட்டார் சைக்கிளில் கடந்த போது அதிவேகமாக வந்த இராணுவ வாகனத்தால் தாக்கப்பட்டு ஆறு நாட்கள் சிகிச்சை பலனின்றி உயிர் துறந்தார். அவர் இதுகாறும் செய்து வந்த புண்ணிய காரியங்களை உலகிற்கு காட்டுவது போல அன்னாரின் உயிர் ஒரு வெள்ளிக்கிழமை (26.03.2021) பிரதோஷ நாளில் பிரதோஷ நேரத்தில் மாலை 4.30 மணியளவில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தது. அவர் விட்டுச் சென்ற அருட்பணிகள் இறையருளாலும் ஐயாவின் ஆசியினாலும் மேலும் தொடர வேண்டுமென எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அடிமேல் பூ

பூமாலை சுமந்த கையர்க்கோர் பாமாலை சாற்றுகிறேன்
நூல்சுமந்த நெஞ்சினார்க்கோர் புகழ்மாலை சாற்றுகின்றேன்
பன்னிரு திருமுறையும் பதினெண் புராணமும்
தன்னிறைவாய் ஓதிடுவார் தகைமைகளும் கூறிடுவார்
நாரணர் திருத்தலத்தில் சுவர்க்கவாயில் திறந்திருக்க
ஏகாதசி புராணபயன் எளிமையாய் எடுத்துரைப்பார்
காசி காண்டத்திற்கு கனிவான உரை செய்தார்
காலம் பெற்ற பயன் நூலாய் வெளியிட்டார்
நுண்மாண் நுழைபுலம் கொண்ட
நூலறிவும் மேலாண்மையும்
வடமொழியும் தென்தமிழும் வளமாய் வந்தவர்க்கு
உடல் வலியும் உபாதைகளும் வலியவந்தனவே
பண்டிதராய் இருந்து தான் படித்த தீந்தமிழை
எண்டிசையும் கேட்ப எடுத்தியம்பும் மதியாளர்
அண்டியே வந்தவர்க்கு ஆறுதல்கள் அறிவுரைகள்
வேண்டியவாறு விளக்கங் கூறிடுவார்
வந்தநோய் வாட்டிடவும் அந்த வலி மறந்து
வந்தவர் மேல் பரிவாக வார்த்தைகள் பேசிடுவார்
எந்த ஒரு பொருள் பற்றி விளக்கம் கேட்டாலும்
'அந்த' புத்தகத்தில் அழகாய் இருக்கென்பார்
ஆசாரம் கிரியைமுறை பற்றி கேட்டுவிட்டால்
ஆதாரம் 'பதினெட்டாம்' ஆகமத்தில் உண்டென்பார்
ஞானகுரு முருகேசர் ஞானபரம்பரையோன்
ஞான உபதேசம் தந்தைபால் பெற்றிருந்தார்
வைதீகம் காத்த வளமான சாஸ்திரிகள் சீதாராம் ஐயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானளாவு தமிழ்கற்ற பண்டித மணி ஐயா
ஏழாலை ஊர்வாழ்ந்த பண்டிதர் கந்தையா
தாழாத தவயோகி கார்த்தி கேசையா
முதலாம் பல பெரியோர் வாய்மொழிந்த அறிவுரைகள்
இதமாய் செவிமடுத்த தன்மையினால்
உதவிய அறிவுரைகள் ஊக்கமெல்லாம்
அவர் உடலை நீத்தாலும் அவர் மேல் பத்தி கொண்டு
அவர் தந்த நன்னெறியை அகத்தில் வைப்போமேல்
அவர் அடிமேல் பூ வைத்தல் ஆகும்
அதுவன்றோ அதுவன்றோ.

சிறிய தாய் மகன்

**- சோமசுந்தரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாணர் ஐயா தனது தாய் மற்றும் மனைவியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னாள் வடமாகாண முதலமைச்சரால் கௌரவிப்பு



தனது பெறாமக்களுடன் கோயில் வாசலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடமிருந்து வலமாக விஜயன் சர்மா ஐயா, சிறுவன் அருள் , ஸ்ரீ காந்தன் சர்மா ஐயா, வாணர் ஐயா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட அறிவுக் களஞ்சியம்

எனக்கு பத்து வயது நிரம்பாத பருவம் தொட்டு இன்றுவரை பார்த்து படித்து பழகி நடமாடும் பல்கலைக்கழகம் அண்ணர் பொன்னம்பலவாணர். இரு மொழிகளிலும் தேர்ச்சியும், செயல்திறமும் கொண்டவர். தான் கொண்ட தேர்ச்சியை மற்றவர்களுக்கு கற்பிக்கவோ, வழிநடத்தவோ குருவாயிருந்து என்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் நடத்திய குருபீடம்.

ஆன்மீகத்துறைகளிலும், அறிவுத்துறையிலும் வளர்ச்சியடைந்த திருமகனார். தன்னைச் சார்ந்தவர்களை ஆற்றுப்படுத்தி ஆறுதல் சொல்லி பயிற்சிகளை வழங்கி அறநெறி வழியில் வழி நடத்திய குரு. சந்தேகங்களை தெளிவுற விளங்கப்படுத்தியும் தத்துவங்களை செயல்நெறிப்படுத்தியும் உலகுக்கு ஓர் எடுத்துக் காட்டாக குன்றின் மணி விளக்காய் விளங்கிய அறிஞர்.

நாங்கள் எந்தக் கருத்தை முன் வைத்தாலும் அதன் உட்கருத்தை அறிந்து அறிவிக்கும் பெரு மகனார். செய்யுளில் இருந்த காசி காண்டத்தை வசன நடையாக உருவாக்கி மக்களுக்குப் படிக்கத் தந்த பண்டிதர். அவருடைய அந்த நூல் எமக்கு செய்யுளில் இருந்த விளங்காத பல உண்மைகள் விளங்கின. தேசிகா தரிசனம், புண்ணியம், ஸ்பரிசம், பாபநாசனம், சொர்ப்பனம், சர்வதீர்த்தானாம், ஸ்னானம், மோட்சசாசனாம். கங்கையில் குளித்தவர்கள் எல்லாருக்கும் முத்தி கிடைக்குமா என்பதற்கு உதாரணமாக உமாதேவியாரும். சிவபெருமானும் திருவிளையாடலை வசன நடையில் விளங்கப்படுத்தி நம்பிக்கை உண்டேல் எதையும் வெல்லலாம் என்ற கூற்றை இறைவன் கூறியதை தெளிவுபடுத்தி செயல் உருவம் கொடுத்தார்.

நாயன்மார்கள் காட்டிய வாக்கை அவர்கள் காட்டிய பாதையில் நட என்று வழிநடத்தி வைத்த அண்ணலார். கிருபானந்த வாரியார் நித்திய நியமத்துடன் சுத்தமாய் பாராயணம் செய்தால் தணலிலோ கனலிலோ காணலாம் என்று சொன்னதை அறிஞரை அணுகிக் கேட்ட பொழுது செய்து பார்த்தால் முடிந்ததே என்று இலகுவாகக் கூறினார். அதற்கு உரிய தேவேந்திர சங்கம வகுப்பு படிக்கத் தந்து வழிநடத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை பராசக்தியையும், முருகனையும் 48 தினங்களுக்குள் கண்டு கதைக்க வைத்து என்னையும் இவ்வுலகில் ஒரு மனிதனாக வாழ வைத்தவர் அண்ணல் பொன்னம்பலவாணர்.

வாழ்ந்து துறந்தால் தான் துறவு வாழாமை துறப்பது துறவு அல்ல. நாள் வாழாமல் துறக்க நினைக்க வாழ்ந்து தான் துறக்க வேண்டும் என்று வழிப்படுத்தினார். எல்லோரும் காசியில் சென்று கடமைகளை செய்து விட்டோம் என்று சொல்வார்கள். ஆனால் அண்ணலும் நானும் சந்தித்து கதைத்த போது காசி எங்கும் இல்லை உள்ளத்தில் உள்ளது காசி என்றார். நான் இருக்கின்றேன் எங்கே என்றார்? பொன்னாலையில் என்றேன். பிள்ளையார், வைரவர், கிருஷ்ணர், சிவன், அம்மன், சுடலை துர்வாசர் பிட்டி தீர்த்தத்தை நானும் பார்த்தேன். கடமை செய்தேன். அவரும் ஆமோதித்தார்.

திருவாசகத்தில் சிவபுராணம், ஆசைப்பத்து, அடைக்கலப்பத்து, யாத்திரைப்பத்து, இவற்றைப் படித்தால் மனித வாழ்க்கைக்குத் தேவையானது உள்ளது என படிக்க வைத்தார். அவரது ஆன்மா பிரிவதற்கு 24 மணித்தியாலங்க ளுக்கு முன் எனது கனவில் தோன்றி நான் விடை பெறுகிறேன். யாத்திரைப்பத்து படி என்றார். என்னால் படிக்க முடியாத நிலையில் சகோதரி தேவகியை படி என் றேன். அவர்கள் படிக்க அவர் யாத்திரையை மேற் கொண்டார் அறிவுக் களஞ்சியத்தை.

இடம்பெயர்ந்து இருந்தவேளை கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்தில் இடம் பெயர்ந்து இருந்த அறிஞர் பெருமக்களை ஒன்றுகூட்டி பன்னிரு திருமுறைகளை பாராயணம் செய்வித்து மக்களை தத்தமது இடத்துக்குச் செல்ல வழி காட்டியதுடன் அகில இலங்கை திருமுறை மன்றத்தினால் மழை வேண்டி பாடும் திருப்பதிகங்களை அச்சுக்கோர்த்துவித்து மக்களை பாட வைத்து பங்குனி மாதத்திலும் மழையை வரவழைக்க வழி காட்டினார்.

திருமுறையோ, புராணங்களோ படித்து கொண்டிருக்கும் பொழுது பொருள் விளங்கவில்லை என்று கேட்டபோது அதைப் பாடிய வரை ஒரு பத்து நிமிடங்கள் தியானி. மீண்டும் படி பொருள் தானாக தெரியும் என்றார். அதை அனுபவத்தில் உணர்ந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை நல்லூர்த் தேரடியில் பாராயணம் செய்யும் ஆறுமுகம் என்பவர் காணாமல் போய்விட்டார். குடும்பத்தினர் தொடர்புகொண்டபோது கவலைப்படவேண்டாம். திருமுருகாற்றுப்படையை கோவில் வாசலில் பாடுங்கள் என்றார். அவர் தினமும் பாட அவரும் தாய் வீடு வந்தார். தனக்காக வாழாது பிறருக்காக வாழ்ந்த பெருந்தகை.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். உயிர் உள்ள வரை நினைக்கின்றோம்.


ஆ. கனகசபை
முக்குறுணிப் பிள்ளையார் கோவில்
தர்மகர்த்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

சைவத்தமிழ்ப் பூப்பந்தலின் மல்லிகைப் பூவொன்று விநாயகப்
பெருமானின் பாதக் கமலங்களுடன் கலந்தது



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16 | 26 |
| 10 | 03 |
| 1945 | 2021 |

## அமரர். பண்டிதர்
# தியாகராஜா பொன்னம்பலவாணர்

**( பொன்னாலையூர் சைவப் பெரியார், சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பரிபாலனசபை உறுப்பினர்,
சமாதான நீதவான் )**

தக்க சமயத்தில் இட்டவிதை மண்ணில் களம் பதித்தார்
மண்ணும் பயன் பெற மக்களும் பயன் பெற்றனர்
தூய வெண்ணீறு நெற்றியில் துலங்க
வெள்ளை நிற வேட்டியை கட்டி சால்வையால் போர்த்து
குமிழ்மிதியுடன் உலாவி வந்த சைவத்தமிழ்ப் பண்டிதர்
தம் உடல் பொருள் ஆவி மூன்றையும்
சைவத்திற்கே அர்ப்பணித்த பெருந்தகை
தனது உணர்வுகளாலும் உறுப்புக்களாலும் பக்தியூற்றினை
சித்தி விநாயகரின் பாதாரவிந்தங்களில் அர்ப்பணித்த அர்ச்சகர்
அன்பர்களுடன் அளாவளாவும் போது அழகுபட
சிரித்த முகத்துடன் சித்தாந்த வேதாந்தங்களை
சிறுகதைளாக புரிய வைக்கும் புலவர்
அவர் தம் நினைவுகளும் போதனைகளும் நம் நினைவை விட்டகலா
வல்ல சித்தி விநாயகர் அருளால் மலர்க அமரர் புகழ்

**பிரிவுத்துயர் பகிரும்**
***தேவஸ்தான பரிபாலனசபை***
***பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

மண்ணுலகில்
16.10.1945

விண்ணுலகில்
26.03.2021



சைவ சித்தாந்த பண்டிதரும், பொன்னாலை சித்தி விநாயகர்
ஆலய பிரதம அர்ச்சகருமாகிய

அமரர்

## தியாகராஜா பொன்னம்பலவாணர் ஐயா

எமது ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் பல்லாண்டுகளாக இடம்பெற்றுவரும் "கந்தபுராண படிப்பு" பயன்கூறுனரும், எமது ஆலய உற்சவங்களிற்கு வருகை தந்து சிறப்பிப்பவருமாகிய வாணர் ஐயா அவர்களின் அகால பிரிவினால் ஆழ்ந்த துயருறுவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பெரியதம்பிரான் பதம் நாடி பணிந்து நிற்கின்றோம்..

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்
ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்
பரிபாலனசபையினரும், முருகனடியார்களும்.

சுழிபுரம்
27.03.2021

சுசி டிஜிட்டல், சுழிபுரம் 0773275598




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

பொன்னாலை சித்திவிநாயகர் ஆலய நிர்வாகியும்
அட்சகருமான, சிவத்தமிழ் பண்டிதர்

தோற்றம்
16 . 10 . 1945

மறைவு
26 . 03 . 2021



அமரர்

## தியாகராஜா பொன்னம்பலவாணர் ஐயா

ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும்
உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?-உங்கள்
தெய்வீக முகத்திற்கு இணையாகுமா
ஏக்கத்தின் எல்லை தனில் எமையெல்லாம்
தவிக்கவிட்டு பாரினினை விட்டு
நீர் மறைந்த மாயமென்ன?...

பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இளம் சுடர் சனசமூகநிலையம்,
பொன்னாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

பொன்னாலை சித்திவிநாயகர் ஆலய நிர்வாகியும்

அட்சகருமான, சிவத்தமிழ் பண்டிதர்

தோற்றம்
16
.
10
.
1945



மறைவு
26
.
03
.
2021

அமரர்

## தியாகராஜா பொன்னம்பலவாணர் ஐயா

*கண்கள் பல உனைத்தேட*
*காணமால் காலனுடன் சென்றதேனோ*
*கள்ளமில்லா வெள்ளை மனமும்*
*புன்னகை பூத்த பொன் முகமும் மறைந்ததேனோ*
*கண்களெல்லாம் கடலாய் பொங்க*
*கலங்கவிட்டு எங்கு சென்றாய்*
*அமைதியாய் மரணத் திரையில்....*
*மௌனமாய் மறைந்த தேனோ*

ஓம் சாந்தி ...ஓம் சாந்தி...ஓம் சாந்தி..

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொன்னாலை சன சமூகநிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

பொன்னாலையை பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட,

அமரர்

## பண்டிதர் தி.பொன்னம்பலவாணர்



பிறப்பு
07 . 03 . 1945

இறப்பு
26 . 03 . 2021

பொன்னாலை கலசெட்டியவத்தை சித்தி விநாயகர் தந்த அற்புத
அறிவாளர் சிவத்தமிழ் பண்டிதர் எங்கள் கோயில் பூசகர்
பொன்னம்பலவாணர் ஐயா நேற்று சிரித்தபடி நியமாய் இருந்தீர்கள்
கண்முடி முளிப்பதற்குள் பொன்னம்பலத்துள் சென்று விட்டீர்களே
நித்தம் உங்கள் உருவம் நினைவில் வருகையில் எம் மனமெல்லாம்
நினைவில் துடிக்கிறது ஐயா
சுவர்ணா புரியும் தன் பொக்கிஷத்தை இழந்து தவிர்க்கிறது ஐயா

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.


பிள்ளையார் கதை
உபயகாரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

பொன்னாலை சித்திவிநாயகர் ஆலய நிர்வாகியும்
அட்சகருமான, சிவத்தமிழ் பண்டிதர்



தோற்றம்
16
.
10
.
1945

மறைவு
26
.
03
.
2021

அமரர்

## தியாகராஜா பொன்னம்பலவாணர் ஐயா

அயலவனாய் உறவினராய் அனைவற்கும் எஜமானாய்
ஆறுதல் பல கூறி அன்புடன் வாழ்தெம்மை
இன்முகம் காட்டி இன்றுவரை வாழ்ந்து விட்ட
ஈராறு கரம் கொண்டவேலன் புதல்வனாய்
உதித்த ஆண்டு நற்பதைத் தாண்டினாலும்
ஊதியம் வேண்டாது தொண்டு பல ஆற்றி
எமக்கெல்லாம் ஆசானாய்,உறவினனாய் இருந்துவிட்டு
ஏன் ஐயா எமைவிட்டு விண்ணுக்கு விருந்தாளியானீர்
ஐயனே உனைப்பிரிந்த செய்திகேட்டு எம் இதயமே
ஒருகணம் நின்று ஓடி மீண்டதையா
ஓடிவருவிரா மீண்டும் எம்முன் என எண்ணும்போது
ஔவை சொன்ன சொலதுவே ஆறுதலை தருகுதையா

ஓம் சாந்தி ...ஓம் சாந்தி...ஓம் சாந்தி..

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொ .சிவகுருநாதர் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முருக விரதம்

## பண்டிதர்

## தி. பொன்னம்பலவாணர் அவர்கள் எழுதியது

ஐப்பசி வெள்ளிக்கிழமை விரதம், திருக்கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் என்னும் மூன்றும் முருகப்பெருமானைக் குறித்து அனுட்டிக்கத்தக்க விரதங்கள் ஆகும்.

இவ்விரதங்களில் ஒன்றையோ இரண்டையோ, மூன்றையுமோ பக்திச்சிரத்தையுடன் அனுட்டிப்பதால் முருகப்பெருமானின் இன்னருளைப் பெற்று இவ்வுலகில் நல்வாழ்வும் பின்னர் முருகப்பெருமான் திருவடி நீழலாகிய முத்திப்பேறும் பெறலாம்.

விரதங்களை அனுட்டிக்கும் போது நமது சமய நூல்களில் கூறிய விதிமுறைகளைப் பூரணமாகப் பின்பற்றுதல் இக்காலத்தில் பலருக்கு இயலாமல் இருக்கலாம். விதிமுறைகளை முழுமையாகப் பின்பற்றாமல் விட்டாலும் கூட பக்திசிரத்தையும், வழிபாடும் நன்கு இருக்குமாயின் விரதபலன் தப்பாது கிட்டும்.

விரதம் அனுட்டிப்பவர் விரதம் அனுட்டிக்கும் முறைகளைச் சரிவர அறிந்தவர்களாயிருத்தல் வேண்டும். தமது உடல்நிலை, சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பசியிருத்தல், நித்திரை விழித்தல் முதலிய நியதிகளைக் குறைத்தும் கொள்ளலாம்.

மனத்தைத் தூய்மையாகவும், தெய்வசிந்தை வழிபாடு என்பனவற்றில் ஈடுபடுவதற்காகவுமே உணவைக் குறைத்தல் - ஒழித்தல் என்பன விரத நியமங்களாக உள்ளன. உணவைக் குறைத்தால் பசி மிகுந்து சிந்தனையையும், உடலையும் சோர்வடையச் செய்தல், எக்கருமத்தையும் ஆற்ற முடியாத தன்மையை தோத்திரங்கள் புராணங்களைக் கூட ஓதமுடியாத பலவீனத்தை உண்டாக்கும் என்ற நிலையுள்ள பலவீனமான உடம்பை உடையவர்கள் உணவை ஒழித்தல் குறைத்தல்களில் தம் உடல் நிலைக்கு ஏற்ற நியதியை மேற்கொள்ளலாம்.

இக்காலத்தில் பலர் உணவைக் குறைத்தலும், நீராடி உணவு உண்ணுதலும் தான் முழுமையான நியதியென்று நம்புகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது முற்றிலும் தவறான கருத்தாகும்.

தெய்வ வழிபாடு, செபம், தியானம் முதலிய சிவபுண்ணியச் செயல்களில் ஈடுபடாது விரதம் அனுட்டிப்பது பயன் தராது. விரத காலங்களில் சிவபுண்ணியச் செயல்களான ஆலய வழிபாடு, செபம், தியானம், தோத்திரம், புராணம் படித்தல், கேட்டல் என்பனவற்றை மேற்கொள்வதோடு பெரியோர், குருமார், பெற்றோர் மகிழுமாறு அவர்களுக்குரிய கடமைகளைச் செய்தல் வறியோர், நோயாளர், உடலூனமுற்றோருக்கு உதவுதல் முதலிய புண்ணியச் செயல்களையும் இயன்றளவு மேற்கொள்ளல் வேண்டும்.

விரத காலங்களில் மேற் சொல்லப்பட்ட புண்ணியங்களை மேற்கொள்வதோடு தீய பண்புகளை விலக்கி நற்குணங்களை மேற்கொள்வதிலும் கண்ணும் கருத்துமாயிருத்தல் வேண்டும். நற் பண்புகளை மிகுவிக்கும் நல்லார் இணக்கத்தைப் பேணுதல், கோபத்தை அடககி நிதானத்தை மேற்கொள்ளல், பிறர் தவறு செய்யும் போது மன்னித்தல் முதலிய குணங்களைப் பேணுதலோடு, தான் செய்யும் நற் செயல்களை வியந்து அகங்காரம் கொள்ளுதல், பிறரிடம் உள்ள சிறுமைகளைக் கூறி இகழுதல், நேர்மையற்ற வழிகளில் இலாபம் அடையும் வஞ்சக எண்ணங்களில் விருப்பம் கொள்ளுதல் போன்ற தீய பண்புகளை விலக்கவும் விரதகாலங்களில் பெருமுயற்சி செய்தல் வேண்டும்.

விரத நாட்களுக்கு முதல் நாள் தூய்மையாக இருத்தலும், விரத நாளன்று சூரிய உதயத்திற்கு முன் எழுந்து மந்திர பூர்வமாக நீறணிந்து பஞ்சாட்சர செபம் செய்தல், சூரியன், திக்குத் தேவர்களை வணங்குதலாகிய புனித சடங்குகளுடன் கூடிய அனுட்டானம் பண்ணல் அவசியம். விரதமிருப்போர் சமய தீட்சை பெறாதவராயிருந்தால் இவ்வாறு அனுட்டானம் பண்ண இயலாது. விரதம் இருத்தல், பிதிர்காரியம் செய்தல், திருவிழா முதலிய வேளைகளில் உபயகாரராயிருந்து தருப்பை போடுதல், மந்திரபூர்வமாக திருமணச் சடங்கு செய்தல் ஆகியவற்றிற்கு சமய தீட்சை பெற்றிருத்தல் மிக அவசியமானதால் சைவசமயிகள் தீட்சை பெற்றிருத்தல் வேண்டும். சைவ சமயிகள் எந்தக் கடவுளைக் குறித்து விரதமிருந்தாலும் திருநீறணிதல், பஞ்சாட்சர செபம் செய்தல், உருத்திராக்கம் அணிதல் என்பன அவசியம். முருகப் பெருமானைக் குறித்து விரதமிருக்கும் காலங்களில் பஞ்சாட்சர செபத்தோடு முருக நாம செபத்தை அதிகம் செய்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருக விரத காலங்களில் முருக விரதமிருந்து நன்மையடைந்தவர் களின் வரலாற்றையும், முருகனின் அருட் பெருமைகளையும் கேட்டோ படித்தோ சிந்தித்தல் நன்று.

பகீரதன் என்னும் அரசனின் நாட்டை கோரன் என்னும் அசுரன் கவர்ந்த போது, நாடிழந்த பகீரதன் தன் குருவின் உபதேசப்படி நியமமாக முருகப் பெருமானைக் குறித்து ஐப்பசி முதல் வெள்ளி தொடங்கி மூன்று வருடங்கள் விரதமிருந்தான். முருகப்பெருமானின் அருளால் வேலாயுதம் சென்று பகீரதனின் பகைவர்களை அழித்து பகீரதன் நாடு பெற்றான்.

பன்னிரண்டு வருடம் நாரத முனிவர் திருக்கார்த்திகை விரதம் அனுட்டித்து எல்லா முனிவர்களுக்கும் மேலான சிறப்பையடைந்தார்.

முசுகுந்த மன்னன் கந்தசஷ்டி விரதமிருந்ததால் இந்திரன் முதலிய தேவர்கள் போற்றும் நிலையை அடைந்ததோடு திருமால் பூசித்த சிவமூர்த்தியை தன் நாட்டில் வைத்துக் கோயில் கட்டி வணங்கிப் பெரும் பேறுகள் பெற்றான். தேவர்களும் கந்த சஷ்டி விரதமிருந்து அசுரரால் கவரப்பட்ட நாட்டை மீண்டும் பெற்றனர்.

அகத்தியர், வசிட்டர், காசிபர், இடைக்காடர், சிகண்டி முதலான முனிவர்கள், ஆத்திசூடி அருளிய ஔவையார், திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர், பெரியபுராணம் தந்த சேக்கிழார், திருப்புகழ் அமிர்த அருணகிரிநாதர், கந்தர் கலிவெண்பா பாடிய குமரகுருபரர், கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார், சண்முக கவசம் அளித்த பாம்பன் சுவாமிகள், கந்த சஷ்டி கவசம் தந்த தேவராஜன் சுவாமிகள், தத்துவச் சித்தரான தாயுமான சுவாமிகள் ஆகிய மகான்கள் முருகப்பெருமான் மீது அளவிறந்த பக்தி கொண்டு முருகன் அருள் பெற்று வாழ்ந்த பல புண்ணியர்களில் ஒரு சிலராவர்.

சைவசமய குரவர்கள் நால்வர்க்குப் பின் வந்த ஐந்தாவது குரவரென சிவஞானிகளால் போற்றிப் பெற்ற அருணகிரிநாதர் அருளிச் செய்த கந்தரநுபூதிப் பாடல் ஒன்றில் முருகப் பெருமானை "விரதா" என்று வணங்குகின்றார். அப்பாடலும் பொருளும் பின்வருமாறு.

> கருதா மறவா நெறிகாண எனக்
> கிருதாள் வசனந்தரஎன் றிசைவாய்
> வரதா முருகாமயில் வாகனனே
> விரதா சுரசூர விபாடணனே.

பொருள் : விரதா - அடியாரைக் காக்கும் விரதத்தை உடையவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுர-தேவரே! வரதா - கேட்ட வரங்களை வழங்குபவரே!, முருகா - முருகக் கடவுளே!, மயில்வாகனனே - மயிலை வாகனமாகக் கொண்டவரே!, சூர விபாடணனே - சூரபன்மனை வேலால் பிளந்தவரே!, கருதா மறவா நெறிகாண- நினைப்பு மறப்பு அற்ற வழியைக் கண்டு கொள்ள, எனக்கு - அடியேனுக்கு, இருதாள் வசனந்தர - இருபாதங்களாகிய தாமரைகளைத் தருவதற்கு, என்று இசைவாய் - எப்பொழுது திருவுள்ளம் இசைந்து அருளுவீா?

எல்லாம் அவன் செயலே என்றுணர்ந்து முருகப் பெருமானிடம் சரணாகதியடைந்து, எமது பொல்லா வினைகளெல்லாம் போயகல அவனை நினைந்துருகி உய்தி பெறுவோமாக!.

அந்திப்போது அழகுறவே நடித்தருளும்
வழித்துணைவா் அருளும் கோவை
வந்திப்போா் நினைத்தபடி மயில்ஏறி
அயிலெடுத்து வரும்செவ் வேளைச்
சிந்திப்போம் புகழ்ந்திடுவோம் மலரணிவோம்
அவா்கமலத் தாளும் தோளும்
சிந்திப்போம் ஆதலினால் நமதுபழ
வினைகளெல்லாம் சிந்திப் போமே
-திருவிரிஞ்சைப் புராணம்

துய்யதோா் மறைக ளாலும்
துதித்திடற்(கு) அரிய செவ்வேள்
செய்யபோ் அடிகள் வாழ்க!
சேவலும் மயிலும் வாழ்க!
வெய்யசூா் மாா்பு கீண்ட
வேற்படை வாழ்க! அன்னான்
பொய்யில்சீா் அடியாா் வாழ்க!
வாழ்கஇப் புவனம் எல்லாம்!
- கந்தபுராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பிள்ளையார் கதை விளக்கம்

## பண்டிதர்

## தி. பொன்னம்பலவாணர் அவர்கள் எழுதியது

### 1ம் நாள்

பிள்ளையாரின் தோற்றம் பல புராணங்களில் பல விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. கந்தபுராணத்தில் சொல்லப்பட்ட சிவனும் உமையும் சித்திர மண்டபத்தில் உள்ள பிரணவ எழுத்துக்களை நோக்க அவ்வெழுத்துக்களிலிருந்து இரு யானைகள் தோன்றிப் பிள்ளையாரைத் தோற்றுவித்த வரலாறு உள்ளது. விநாயகர் புராணத்தில் விநாயகர் தோற்ற வரலாறும் ஒன்று.

பிள்ளையார் கதை விரத காலத்தில் நம் ஆலயங்களில் படிக்கப்படும் பிள்ளையார் கதை என்னும் நூலில் பிள்ளையார் தோற்றம் ஒன்று கூறப்பட்டுள்ளது. இந்தக் கதையையே திருஞானசம்பந்தர் 'பிடியதனுருவுமை' என்று தொடங்கும் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேருமலையின் வடபாலுள்ள இராமநகரில் வாழ்ந்த அந்தணக் குடும்பம் பிள்ளையில்லாது சிவபெருமானைக் குறித்து வழிபாடுகள் செய்தும், ஆலயம் அமைத்தல், பூஞ்சோலைகள் உண்டாக்குதல் முதலிய தருமங்கள் செய்து சிவபிரானை வழிபட்ட சிறப்பால் அந்தணக் குடும்பத்துக்கு உமையம்மையார் பிள்ளையாகத் தோன்றி வளர்ந்து, தக்கபருவமடைந்தபோது தவம் செய்து சிவபிரானை திருமணம் செய்தார். திருமணம் விரிவாக நிகழ்ந்த பின்னர் சிவனும் உமையும் அவந்தி நகருக்குச் செல்லும்போது வழியில் இரு யானைகள் கூடி மகிழ்ந்து விளையாடுவதைக் கண்டு தாமும் யானையாக உருமாறி மகிழ்ந்து விளையாடினார். அப்போது பூமி பெருமையுறவும் தேவர் தம் கடமைகளை ஒழுங்குடன் செய்யவும் அந்தணர் தம் ஒழுக்கங்களில் மேம்படவும், பசுக் கூட்டங்கள் உலகில் பொலிந்து பெருகவும் வேதாகம நீதி மேன்மையுறவும் விநாயகப் பெருமான் தோன்றியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ம் நாள்

பிள்ளைப்பேற்றை விரும்பி சிவ வழிபாடு தானதருமம் செய்த அந்தணர் குடும்பம் பிள்ளைப் பேற்றுக்குரிய விதி இல்லாதபோதும் சிவனது கருணையாகிய சிவ சக்தியே பிள்ளையாகப் பிறந்திருக்கிறது. அந்தணருக்கு இப்பிறப்பில் பிள்ளைப் பாக்கியம் இல்லை என்று சிவபெருமான் கூறுவதும் எப்பரிசாயினும் எம்பொருட்டு பிள்ளைப் பேற்றை வழங்க வேண்டும் என உமையம்மை கூறுவதும் நமக்கு அரிய உண்மைகளை உணர்த்துகின்றன. தவத்தின் வலிமை விதியையும் மாற்றி நன்மை செய்யும் என்பது ஒரு தத்துவம். தவம் என்பது உறுதியோடு கூடிய நியாயமான விடாமுயற்சி என்று விளக்கமளித்து வள்ளுவர் கூறும் "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்" என்னும் திருக்குறள் முயற்சிக்கான உதாரணமாகவும் கண்டு ரசிக்கலாம்.

சிவனும் உமையும் உரையாடியதை சிவபெருமானது மனத்திலே நிகழ்ந்த நீதிக்கும் கருணைக்குமான உரையாடலாகக் கருத வேண்டும். வினையின் நியதியான நீதியைச் சிவனது கருணை வென்றருளினதாலேயே அந்தணருக்கு உமையம்மையார் பிள்ளையாகப் பிறந்தார்.

யானை உருக்கொண்டு விநாயகப் பெருமானைத் தோற்றுவித்தருளிய சிவபெருமானும் உமையம்மாரும் பிரகாசம் பொருந்திய திருமேனியுடன் விளங்கும் பிள்ளையாரைப் பார்த்து பிள்ளையே தேவர்களும் மனிதரும் வந்து உன்னை வணங்கும்படியான அருட்பெருமையுடனும், பழம் முதலியவைகளை அடியவர்களிடம் ஏற்று மகிழும் அருள் எளிமையுடனும் விளங்குவாயாக! என்று வாழ்த்தினார். விநாயகரும் தன்னை வணங்குபவரிடம் உள்ள தீக்குணங்களைப் போக்கி அவர்களுக்கு நன்மை பெறும்படி அருள்புரிந்து கொண்டு ஆலமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்தார்.

## 3ம் நாள்

கஜமுகன் என்னும் ஆனைமுகமுடைய அசுரன் ஒருவன் இருந்தான். அவன் தேவர், மனிதர், மிருகம், யமன் முதலிய எந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தாலும் தனக்கு மரணம் ஏற்படாதவாறு வரம் பெற்றுக்கொண்டு தேவருலகத்தை அழித்துத் துன்புறுத்தினான். மனிதரையும் வருத்தினான். தாம்பட்ட துன்பங்களைத் தீர்த்துக்கொள்வதற்காகச் சிவபெருமானிடம் முறையிட தேவர்கள் கயிலை மலைக்குச் சென்றார்கள்.

சிவபெருமான் விநாயகப் பெருமானைத் தோற்றுவித்த பின் உமையம்மையுடன் கயிலையில் இருந்தபோது சென்ற தேவர்கள் கஜமுகனால் ஏற்பட்ட துன்பங்களையும் கஜமுகாசூரனின் அட்டூழியங்களையும் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான் விநாயகப் பெருமானை அழைத்து கஜமுகனையும் அவனுக்குத் துணையாக வரும் படைகளையும் அழித்து வரும்படி கூறினார்.

விநாயகப் பெருமான் பூதப்படைகள் தன்னை எதிர்த்து வந்த அசுர படைகளை நோக்கி தன் கையிலுள்ள பாசத்தை வீச அது அனைவரையும் ஒன்றாகக் கட்டியது. உடனே மற்றைக் கையிலிருந்த அங்குசத்தை வீசி அனைவரையும் ஒரேயடியாக வெட்டித் தொலைத்தார். பின்னர் கஜமுகனை எதிர்த்துப் போரிட்டபோது விநாயகப் பெருமான் கொம்பை முறித்து எறிய அவன் எலியுருவில் வந்தான். எலியாக வந்த அசுரனை வாகனமாக ஏற்று தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் கஜமுகனுக்கும் ஒரே சமயத்தில் அருள்புரிந்தார் விநாயகர்.

கந்தபுராணத்திலும் சரி பிற நூல்களிலும் சரி விநாயகர் அசுரர்களோடு யுத்தம் செய்த விபரம் மிகச் சுருக்கமாகவே கூறப்பட்டிருக்கும். எச்செயலையும் விரைந்து நிறைவேற்றுபவர் பிள்ளையார் என்பதை உணர்த்தும் வகையிலேயே பிள்ளையார் செய்யும் செயல்களை சுருக்கமாகக் கூறுவது புராண மரபாகும்.

## 4ம் நாள்

பிள்ளையார் கதையிலும் சரி கந்தபுராணத்திலும் சரி விநாயகப் பெருமான் கஜமுகனைச் சங்கரித்த பின்னர் வல்லமைக்கும் விநாயகருக்கும் திருமணம் நிகழ்ந்தது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதை போலவே சூரனை முருகப்பெருமான் சங்காரம் செய்தபின் தெய்வானையம்மையார் திருமணம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் சில சாதனைகள் செய்து தன்னை ஆண்மை யுள்ளவன் என்று நிறுவிய பின்னரே அவன் திருமணம் செய்துகொள்ளும் தகுதியைப் பெறுவான் என்பது நம் நாட்டின் பண்டைய கொள்கையாகும். தான் கொன்ற புலியின் பல்லையே வீரன் தாலியாக மனைவிக்கு கட்டுவான் என்ற கருத்தும் இலக்கியங்களில் காணப்படுகின்றது. இந்தக் கொள்கையை உறுதியாக உடைய சமூகத்தில் சொல்லப்பட்ட - சமூகத்திற்கு உயர்ந்த இலட்சியங்களைப் போதித்த புராணங்களிலும் கதைசொல்லும் போக்கிலேயே கடவுளுக்கும் சிறந்த செயல்களைச் செய்த பின்னர் திருமணம் நடந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது எனக் கருதலாம்.

கஜமுக சங்காரத்தின் பின் வல்லமை அம்பிகையைத் திருமணம் செய்த பின்னர் கயிலையை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் செங்காட்டங்குடி என்னுமிடத்தில் சிவலிங்க மூர்த்தியை அமைத்து சிவபூசை செய்தார்.

## 5ம் நாள்

பிள்ளையார் சிவபூசை செய்த இடம் திருச்செங்காட்டங்குடி என்னும் ஊராகும். இத்தலத்தில் உள்ள சிவலிங்கப் பெருமானைப் பிள்ளையார் பூசித்த காரணத்தால் அக்கோவிலுக்கு கணபதீச்சரம் என்று பெயர் ஏற்பட்டுள்ளது. இத்தலத்திலேயே சிறுத்தொண்டர் என்னும் நாயனார் வாழ்ந்து தனது பிள்ளையைக் கறியாக்கிச் சிவனருள் பெற்றார். கஜமுக சங்காரத்தின் பின் பிள்ளையார் சிவபூசை செய்தது போலவே முருகன் ஸ்ரீராம பிரான் ஆகியோர் சிவபூசை செய்து கொலைப் பாவத்தைப் போக்கியதாகப் புராணங்கள் கூறுகின்றன.

உணவுக்காகவோ - காசுக்காகவோ - பகை காரணமாகவோ கொலை செய்தால்தான் கொலைப் பாவம் உண்டாகும். கொலைக்குக் காரணமாக இருக்கும் நீதிபதிக்கும் நீதிபதியின் கட்டளையை நிறைவேற்றும் ஏவலாளிக்கும் கொலைப் பாவம் ஏற்படுவதில்லை. இதேபோல் யுத்தம் செய்வதால் பிள்ளையார் முருகனுக்கு கொலைப்பாவம் ஏற்படுவதில்லை. ஆனால் சிவபூசையின் பெருமையினையும் கொலையின் தீமையினையும் நமக்கு உணர்த்துவதற்காகவே பிள்ளையாரும் முருகனும் சிவபூசை புரிந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம், கோபம், பேராசை முதலிய தீமைகளை ஒழிப்பதிலும் பார்க்க மது, மாமிசம் போன்ற தீமைகளை ஒழிப்பது சுலபம். இதேபோல சிவ தியானம் செய்தல் யோகசாதனம் செய்தல் ஆகிய உயர்வை அடைவதிலும் பார்க்க ஆலயத்தொண்டு செய்தல், சிவபூசை செய்தல் ஆகிய சிறப்பான காரியங்களைச் செய்வது சுலபம். சுலபமகச் செய்யத்தக்க அரிய செயலான சிவபூசை செய்வதால் கொலைப்பாவம் முதலிய தீவினைகளை நீக்கலாம் என்ற அரிய உண்மை இவ்வுலகமும் தேவர்களும் உணரும் படியாகத் திருச்செங்காட்டங்குடியில் சிவபூசை செய்த பின் திருக்கயிலை மலையை அடைந்தார். அங்கு தேவர்களும் சிவகணங்களும் தமக்கெல்லாம் தலைவராக விநாயகப் பெருமானை இருக்க வேண்டுமென பணிந்து கணநாதருக்கு உரிய முடியை விநாயகப் பெருமானுக்குச் சூட்டினார்கள்.

## 6ம் நாள்

தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் முதலிய எல்லோரும் விநாயகப் பெருமானைக் கணநாதனாகப் பெற்றுப் பெருமகிழ்வு எய்தினர். கணங்களுக்கெல்லாம் தலைவன் என்ற கருத்திலேயே பிள்ளையாருக்கு கணபதி என்னும் திருப்பெயரும் ஏற்பட்டது.

பிள்ளையாரைக் குறித்து விரதமிருந்து பெருமையடைய வேண்டுமெனத் தேவர் முனிவர் முதலிய அனைவரும் விருப்புற்றனர். ஆவணி மாத வளர்பிறைக் காலத்தில் வரும் சதுர்த்தி திதியில் அனைவரும் விநாயகரைக் குறித்து விரதமிருந்தனர்.

விநாயகர் சதுர்த்தி விரதமிருந்து பிள்ளையார் அருளால் பல வருடங்கள் அனைவரும் சிறப்புடன் வாழ்ந்தனர். ஒரு நாள் விநாயகர் சதுர்த்தியன்று விநாயகப் பெருமானைத் தேவர்கள் பூசித்துக் கொண்டிருந்தபோது அவர்கள் வழிபாட்டில் மகிழ்ந்த பிள்ளையார் தந்தையாகிய சிவபெருமானைப் போல திருநடனமாடினார். அனைவரும் நர்த்தன கணபதியின் திருக்கூத்தின் அற்புதானந்தம் பெற்றவர்களாய் பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். அப்போது சந்திரன் தன்னுடைய அழகை அதிகம் மதித்து விநாயகரது திருக்கூத்தையும் தோற்றத்தையும் அலட்சியம் பண்ணி ஏளனமாகச் சிரித்தான். அதுகண்ட பிள்ளையார் சந்திரனைப் பார்த்து என்னை இகழ்ந்து சிரித்தபடியால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தினத்தில் (ஆவணிச் சதுர்த்தி நாளில்) உன்னைப் பார்ப்பவர்களுக்கு பழி - பாவம் - துன்பம் என்பன ஏற்படும் எனச் சாபமிட்டார். இச்சாபத்தால் எல்லோரும் சந்திரனை விநாயகர் சதுர்த்தி நாளில் இகழ்ந்து அவமதிக்கும் நிலை உண்டானது.

மனிதருக்கு இரண்டு காரணத்தால் கோபம் வரும் பிறருடைய தவறுகளைக் காணும்போதும் கோபம் வரும். தன்னுடைய பலவீனம், தவறு என்பன வெளிப்படுவதைச் சகிக்க இயலாத கட்டத்திலும் கோபம் வரும். இவ்வாறாக வரும் கோபங்களில் கோபிப்பவர் கோபிக்கப்படுபவர் ஆகிய இருவருமே பலவீனமும் கஷ்டமும் அடைகின்றனர். மனித கோபம் போன்றதன்று பிள்ளையாரின் கோபம் சந்திரன் செய்த தவறினால் சந்திரனுக்கு வந்த சிறுமையை வெளிப்படுத்துவதாயும் சந்திரனைப் போல் பிறர் தவறு செய்யாதபடியால் தடுப்பதாகவுமே பிள்ளையாரது கோபம் விளங்குகிறது. பிள்ளையாரைக் கண்டு அனைவரும் மகிழ சந்திரன் மட்டும் இகழ்ந்து சிரித்தமைக்கு காரணம் பிள்ளையாரின் தோற்றம் அழகின்றி இருந்தல்ல. சந்திரனது மனத்தில் அகங்காரம் குடிகொண்டிருந்தமையே ஆகும்.

அகங்காரம் உள்ளவன் எவ்வளவு அழகு - அறிவு - பதவிகளில் சிறந்தவனாக இருந்தாலும் அவனைக் காண்பது பழி - பாவம் - துன்பம் என்பதை உலகிற்கு உணர்த்தவும் சந்திரனைத் திருத்தி அகங்காரத்தைப் போக்கவும் பிள்ளையார் கோபம் கொண்டமை போன்று சாபம் கொடுத்தார்.

## 7ம் நாள்

பூமியிலுள்ளவர்கள் ஆவணிச் சதுர்த்தி விரதம் அனுட்டிக்க கண்ணபிரான் காரணமாயிருந்தார் என்றும், ஆவணிச் சதுர்த்தி விரதத்தைப் பாண்டவர்கள் அநுட்டித்துத் தமது நாட்டை யுத்தத்தால் வென்று பெற்றனர் என்றும் 'பிள்ளையார் கதை' கூறுகிறது.

தருமர் முதலிய பாண்டவ புத்திரர்கள், தேவகி மைந்தனான கண்ணபிரானைப் பணிந்து 'எண்ணிய காரியம் இடையூறின்றி உடனே பலிக்கவும் யுத்தத்தில் வெற்றி பெறவும், எந்தெந்தத் தெய்வத்தை எந்தெந்த விரதத்தை வந்தனை செய்ய வேண்டும்' எனக் கேட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணபிரான் பஞ்சபாண்டவரைப் பார்த்து தன்னை வணங்குவார். நினைப்பதெல்லாம் சித்திக்க (கைகூடச்) செய்வதால் சித்தி விநாயகர் என்னும் பெயருடைய பிள்ளையாருடைய விரதமாக ஆவணிச் சதுர்த்தி விரதம் உள்ளது. விநாயகர் சதுர்த்தி விரதம் அனுட்டிப்பதால், பிறக்கும் பிள்ளைகள் நற்பிள்ளைகளாக இருப்பர். செல்வங்கள் எல்லாம் பெருகும் - நினைத்த காரிய சித்தி உண்டாகும். யுத்தத்தில் வெற்றி பெறலாம் என்றும் கூறினார்.

மேலும் பாண்டவர்கள் சதுர்த்தி விரதமிருக்கும் முறையைக் கூறும்படி வேண்டினார்.

ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தி அன்று அதிகாலையில் நீராடி அனுட்டானங்கள் செய்து, மந்திர முறைப்படி விரதமிருப்பதாகச் சங்கற்பம் செய்தல் வேண்டும். பின் வெள்ளியாலோ பொன்னாலோ அல்லது மண்ணாலோ செய்த விநாயகர் திருவுருவத்தில் பிள்ளையாரை எழுந்தருளப் பண்ணிப் பூசிக்க வேண்டும். அபிடேகப் பொருட்கள், பலவகையான பலகாரங்கள், பழவகைகளுடன் கூடிய நிவேதனப் பொருட்கள், பலவகையான பத்திரபுட்பங்கள் எல்லாவற்றையும் சேகரித்து விநாயகப் பெருமானைச் சதுர்த்தியில் பூசிக்க வேண்டும் என்று கூறியதோடு கண்ணபிரான்

சிவபெருமான் - உருத்திரன் - அகலிகை - தமயந்தி - இராமர் - பகீரதன் - அட்டவசுக்கள் - விநாயக சதுர்த்தி விரதமிருந்து நன்மைகள் அடைந்தது மட்டுமன்றிக் கண்ணபிரான் தானும் விநாயக சதுர்த்தி விரதமிருந்து உருக்குமணியைத் திருமணம் செய்ததாகக் கூறினார்.

விநாயகர் பெருமையையும் சதுர்த்தி விரத மகிமையையும் கூறக்கேட்ட பாண்டவர் விநாயக சதுர்த்தி விரதமிருந்து தமக்குரிய நாட்டைப் பெற்றனர்.

### 8ம் நாள்

பிள்ளையார் கதை விரதம் என்னும் விநாயகசஷ்டி விரதத்தை சிவபெருமான் - உமையம்மையார் திருமால் ஆகியவர்களும் அனுட்டித்து நன்மை பெற்றுள்ளனர். இவர்கள் விரதமிருந்த தன்மைகளையும் அடைந்த பயன்களையும் கூறுவதற்காக பிள்ளையார் கதையில் முருகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானின் தோற்றம் - முருகன் சூரனை சங்கரித்தமை - முருகன் தெய்வானை அம்மை திருமணம் முதலியவை ஓரளவு விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஒரு சந்தர்ப்பத்தில் சிவபெருமான் முருகப் பெருமானைக் கோபித்துக் கண்டித்தார். தான் செய்யாத குற்றத்துக்குச் சிவபெருமான் தன்னைக் கோபித்தார் என்று முருகன் தாய் தந்தையரை விட்டுப் பிறதேசம் போனார். முருகன் பிரிவால் உமையம்மைக்கு ஏற்பட்ட கவலை மாற சிவனும் உமையும் சூது விளையாடினர். இவர்களது விளையாட்டுக்குத் திருமால் நடுவராக இருந்தார்.

விளையாட்டில் சிவபெருமான் தோல்வியுற்றார். உமையம்மை தனக்கே வெற்றி என்று கூற சிவனும் தனக்கே வெற்றி என்றார். அப்போது யார் வென்றது என்ற கருத்தில் உமை திருமாலை நோக்கினார். சிவனும் திருமாலை நோக்க திருமால் சிவபெருமானுக்கே வெற்றி என்றார்.

திருமாலின் தீர்ப்பால் உமையம்மையார் அதிக கோபங் கொண்டு பொய்ச் சாட்சி சொன்ன குற்றத்திற்காக குருட்டுப் பாம்பாகி ஆலின் கீழ் இருக்கும்படி சபித்தார். விநாயகப் பெருமான் இருந்த ஆலமரப் பொந்தில் திருமால் பாம்பாக இருந்தார்.

பூவுலகில் உள்ளவர்கள் விநாயக சஷ்டி விரத மகிமை அறியவேண்டும் என்பதற்காகவே ஏழு தேவப் பெண்கள் பூவுலகத்திற்கு வந்து திருமால் பாம்பாக வந்து இருந்த ஆலமரத்தின் கீழ் எழுந்தருளிய விநாயகர் முன் விநாயக சஷ்டி விரதத்தை அனுட்டித்தனர்.

### 9ம் நாள்

மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் சேரும் நாளே விநாயக சஷ்டி தினமாகும். இத்தினத்துக்கு முன் இருபது நாட்கள் தொடர்ந்து இவ்விரதத்தை அனுட்டிக்க வேண்டும்.

கார்த்திகை மாதப் பூரணையும் திருக்கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாளுக்கு அடுத்த நாள் விநாயக சஷ்டி விரதத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தால் 21ம் நாளாக விநாயக சஷ்டி வரும். விநாயக சஷ்டி விரத ஆரம்ப நாளில் இருபத்து ஒரு நூல்களாலான காப்பைக் கையில் கட்டி விரதம் ஆரம்பிக்க வேண்டும். முதல் இருபது நாளும் ஒருநேர உணவுண்பதும் இருபத்தோராம் தினமான விநாயக சஷ்டியன்று உபவாசம் இருக்க வேண்டும் என்பதுமே இவ்விரதத்திற்குரிய உணவு நியமமாகும்.

விரதம் இருக்கத் தீர்மானம் செய்து காப்புக் கட்டுபவர்கள் மரணவீடு - வைத்தியசாலைகள் - சந்தை முதலிய இடங்களுக்குச் சென்றால் காப்புக் கட்டிப் பாதுகாக்கப்படும் புனிதத் தன்மைக்கு இடையூறு உண்டாகுமாதலால் காப்புக் கட்டுபவர்கள் இப்படியான இடங்களுக்குச் செல்லாமலும் உணவுக் கட்டுப்பாட்டைத் தமது உடல் நிலைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டும் விரதமிருப்பது அவசியம். காப்புக் கட்டி விரதமிருக்கும் ஒவ்வொருவருக்கும் முதன்மையான முழுமையான குறிக்கோள் விரதத்தைப் பேணுவதாகவே இருக்க வேண்டும். காப்பது விரதம் என்ற ஆத்திசூடி உபதேசத்தை மறவாது இருபத்தொரு நாட்களும் விநாயக சிந்தனை தோத்திரம் - செபம் என்பனவற்றில் ஈடுபடுவதோடு விநாயகப் பெருமானின் வரலாறு - அருட்செயல்களைக் கேட்டலையும் மேற்கொள்ள வேண்டும்.

## 10ம் நாள்

இருபத்தோராம் நாளாகிய விநாயகசஷ்டி தினத்தில் தேவப் பெண்கள் எழுவரும் ஆலமரத்தின் கீழ் இருந்த ஆலயத்தை மெழுகிக் கோலமிட்டு தோரணம் தூக்கி அலங்கரித்து விசேட அபிஷேகம், பூசை என்பன செய்து வழிபட்டனர். இவற்றையெல்லாம் பாம்புருவில் இருந்தவாறே கவனித்த திருமால் அத்தேவப் பெண்களின் உதவியுடன் விநாயக சஷ்டி விரதத்தினை அனுட்டித்தார். விநாயகப் பெருமானின் அருளால் திருமாலின் சாபம் நீங்க அவர் கயிலைக்குச் சென்று பார்வதி பரமேஸ்வரரைத் தொழுதார்.

திருமால் ஏன் உமை வென்ற போது சிவன் வென்றதாகச் சொன்னார். சிவபெருமானுக்காக திருமால் 'சிவன் வென்றார் என்று சொன்ன போது உமையிட்ட சாபத்திலிருந்து திருமாலைக் காப்பாற்ற சிவபிரான் ஏன் முனையவில்லை?' என்னும் கேள்விகள் பலருக்குச் சாதாரணமாக எழுவது இயற்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் கூத்தாடினாலென்ன - சூதாடினாலென்ன அவன் செயல் எல்லா உயிர்கள் பொருட்டு செய்யும் பஞ்சகிருத்தியமாகும். சிவனது பஞ்ச கிருத்தியங்களில் சிவபெருமானது வல்லமையாகிய சக்திக்கு உரிய முதன்மை வெளிப்படும் வகையிலேயே விளையாட்டில் உமையம்மையார் வெற்றி பெற்றார்.
ஆனால்,

"சிவனை உமை வெல்ல முடியுமா? வேதம் முதலிய சாஸ்திரங்கள் எல்லாம் சிவனது முதன்மையே கூறுவதால் நான் காண்பது சரியா? இது உண்மையா?" என்றெல்லாம் சிந்தித்து திருமால் மனம் குழம்பினார். இப்படியான குழப்பத்தின் விளைவை அனுபவிக்க வேண்டியது திருமாலேயாதலால்தான் சிவனும் உமையும் தாம் வென்றதாகக் கூறித் திருமாலிடம் தீர்ப்புக் கேட்டனர். திருமாலும் சிவன் வென்றார் என்று கூறிச் சாபமும் பெற்றார்.

விநாயக விரதச் சிறப்பால் திருமால் தன் குழப்பம் தீர்ந்தபடியால் தான் உமை தனக்குச் சாபம் இட்டது தனக்காகச் சிவபெருமான் பரிந்து பேசாது எல்லாம் நியாயமே என உணர்ந்து கயிலையில் இருவரையும் பணிந்தார்.

## 11ம் நாள்

உயிர்கள் உய்தியடைய வேண்டும் என்னும் கருணையினாலேயே சிவபெருமானின் செயல்கள் எல்லாம் விளங்குகின்றன. சாதாரண மனிதக் குடும்பங்களில் நடைபெறுவது போல சிவ குடும்பத்தில் நடைபெற்ற - நடைபெற்றதாகக் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் உயிர்களாகிய நாம் பல உண்மைகளை எளிதில் உணர்வதற்காகவேயாகும். இப்படியான பல அடிப்படை உண்மைகளை விளங்கிக் கொள்ளாதவர்களுக்குப் புராணங்கள் எல்லாம் பாமரர்களுக்குக் கூறப்பட்ட கதைகளே என்ற மயக்கம் ஏற்படுவது இயல்பு.

புராணங்களை விரும்பிக் கேட்டுப் பயனடைந்தவர்களில் பெரும்பான்மை யானவர்கள் நைமிசாரண்ய முனிவர்களே என்பதனைச் சிந்தித்தால் புராணங்கள் கதை மூலமாக உணர்த்தும் அரிய உண்மைகளின் பெருமை ஒரு சிறிதாவது புரியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாலின் சாபநீக்கத்தால் உமை சிவபிரானைக் கோபிப்பதும் உமையம்மையின் கோபம்தீரச் சிவபெருமான் பிள்ளையார் கதை விரதம் அனுட்டிப்பதும் - சிவபெருமான் விரதமிருந்ததால் கோபம் மாறிய உமையம்மையார் தானும் விநாயக விரதமிருந்ததால் பரதேசம் போன முருகன் கோபம் நீங்கியவராய்த் தந்தையரை அடுத்திருந்ததும் பிள்ளையார் கதையில் காணப்படும் சிவகுடும்ப நிகழ்ச்சிகளாகும்.

மேலெழுந்தவாரியாக நோக்கினால் இந்நிகழ்ச்சிகள் எல்லாம் பிள்ளையார் கதை விரதத்தின் பெருமையை வெளிப்படுத்துவதற்காக நிகழ்ந்த செயல்களாகத் தோன்றும் இவை பிள்ளையார்கதை விரதத்தின் பெருமையை விளக்குவதோடு வேறும் பல உண்மைகளை உணர்த்துகின்றன.

சிவபெருமான் உமையம்மையார் பிள்ளையாரைக் குறித்து விரதமிருக்க வேண்டும் என்பது அவசியமில்லாத தன்மை போன்றே இவர்களுக்கு விரதமிருப்பது நமக்குப்போல சிரமமான காரியமல்ல. இது மட்டுமன்றி; நாம் நம்மோடு ஒத்தவர்களையோ நம்மிலும் கீழானவர்களையோ மதிக்கக் கூசுவது போல சிவபெருமானும், உமையும் தனது பிள்ளையென்று கருதுகின்ற பிள்ளையாரை மதிக்கக் கூசுவதில்லை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக தெய்வதத்துவ அடிப்படையில் - சிவன் வேறு - உமை வேறு - பிள்ளையார் வேறு - முருகன் வேறு அல்ல. ஆதாலல் இவர்கள் நிகழ்த்தும் நிகழ்ச்சிகள் நம்மவர்க்குப் பல உண்மைகளை உணர்த்தும் அருள்நோக்கம் ஒன்றே உடையன.

## 12ம் நாள்

வச்சிரமாலி என்றொரு அரசன் இருந்தான். இவன் இளமையில் தீரா வியாதியால் துன்புற்றான். நாரத முனிவர் வச்சிரமாலிக்கு விநாய சஷ்டி விரத மகிமையை உபதேசித்தார். பல தேவர்கள் மட்டுமன்றிச் சிவபெருமான் - உமாதேவியார் - திருமால் போன்றவர்களும் விநாயக சஷ்டி விரதமிருந்து நன்மை அடைந்தார்கள் என்ற வரலாறுகளைக் கேட்ட வச்சிரமாலி விநாயகசஷ்டி விரதமிருந்து விநாயகர் அருள் நோய் நீங்கப்பெற்றது மட்டுமன்றி அரசர்க்கு அரசனாகும் முதன்மை பெற்றான். திலோத்தமையைத் திருமணம் செய்து அறிவும் வீரமும் குணமும் மிக்க பல புதல்வர்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயக விரத மகிமையால் கடைசியில் வச்சிரமாலி திருக்கயிலையை அடைந்து சிறப்புற்றான்.

நோயற்ற வாழ்வு - மனைவி மக்களோடு மகிழும் நன்மை - அரசர்க்கெல்லாம் அரசராக விளங்கும் பதவி ஆகிய சிறப்புக்களை மட்டுமன்றிக் கடைசியில் கயிலை வாழ்வாகிய சிவானந்த வாழ்வையும் உதவும் அதி உத்தமமான சிவபுண்ணியமே விநாயக சஷ்டி விரதம் என்பதை வச்சிரமாலியின் கதை உணர்த்துகின்றது.

உத்தமமான சிவபுண்ணியங்களில் ஒன்றாக விளங்குவது விநாயக சஷ்டி விரதம் என்பதை அறிவதன் மூலம் இவ்விரதம் அனுட்டிக்க விரும்புவதும் விரதம் அனுட்டிப்பதும் அவசியமாகும். இப்படியான சிவபுண்ணியங்களிலே மதிப்பு - விருப்பம் முயற்சி என்பன உடையவர்கள் விரதம் அநுட்டிக்கும் வாய்ப்பு இல்லாதவர் களாயிருந்தால் தமது வசதிக்கும் விருப்பத்திற்கும் ஆர்வத்துக்கும் ஏற்ப 21 நாட்களிலும் இரண்டு - அல்லது மூன்று வேளைகளில் விநாயக வழிபாடு தோத்திரம் என்பன செய்தல் நன்று.

## 13ம் நாள்

பிள்ளையார் கதை விரதத்தை அலட்சியம் பண்ணி அனுட்டிப்பது, சிலகாலம் அநுட்டித்துப் பின் அநுட்டிக்காது விடுவது என்பன பெருந் தீவினையாகும். இத்தீவினையின் வலிமை - துன்பம் என்பவற்றை இலக்கணசுந்தரியின் வரலாறு உணர்த்தும்.

இலக்கணசுந்தரி ஒரு அரசி இவளின் கணவன் விக்கிரமாதித்தன் அரசியற் சிறப்பை விரும்பி விநாயக சஷ்டி விரதமிருந்தான், அது கண்ட இலக்கணசுந்தரி தானும் விரதமிருந்தாள். சிலநாட்களின் பின் கையிலிருந்த 21 நூல்களாளான விநாயக விரதக் காப்பை அவிழ்த்து ஒரு தோட்டப் பகுதியில் எறிந்து விட்டு விரத நியமங்களை விட்டுவிட்டாள். பிள்ளையார் விக்கிரமாதித்தனின் கனவில் தோன்றி, இலக்கணசுந்தரி அரண்மனையில் இருந்தால் உனக்கும் நாட்டுக்கும் துன்பம் ஏற்படும் என்றார்.

விக்கிரமாதித்தன் நித்திரை விட்டு எழுந்து கண்ட கனவை மனைவியான இலக்கணசுந்தரிக்கு கூறும்போதே அரண்மனையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமின்றி யானை, குதிரை, எல்லாம் இறந்து கிடந்தன. இத்தீமைகளுக்கும் தன் கனவுக்கும் தொடர்பு இருப்பதைக் கண்டு மனைவியை அரண்மனையிலிருந்து செல்லும்படி கூறினான்.

விநாயக சஷ்டி விரதத்தை மட்டுமன்றி எந்த ஒரு விரதத்தையும் அலட்சியம் பண்ணினாலும் சரி , எந்தவொரு செயலைத் தொடங்கி இடையில் நிறுத்தினாலும் சரி நட்டமும் தீமையும் உண்டாகும். அதிக வசதிகளுக்கு உதவும் மின்சாரம் அலட்சியம் காரணமாக அதிக ஆபத்துக்களையும் வருவிப்பது போல் அதிக நன்மைக்கு ஏதுவான நற்கருமங்களை அலட்சியம் பண்ணுவதும் துன்பங்களுக்கு வழியாய் விடும்.

## 14ம் நாள்

பிள்ளையார் விக்கிரமாதித்தனின் கனவில் தோன்றி அவனது மனைவியை அகற்றும்படி கூறியது தெய்வீகத்துக்குப் பொருத்தமா? எனப் பலர் சந்தேகப்படுகின்றனர்.

விநாயகப் பெருமானின் மேன்மைகொள் தெய்வ நீதியாலும் அவர் விக்கிரமாதித்தன் மீது கொண்ட கருணையாலுமே அவன் கனவில் வெளிப்பட்டு அப்படிச் சொல்லியருளினார் என்பதை உணர்த்துவதற்கும் நமக்கு நல்லறிவோடு விநாயகர் அருளும் தேவை. திரைமறையில் செய்யப்படும் சூழ்ச்சிகளின் முடிவை வெளிப்படுத்தக் கூறுவதுபோல் தெய்வ நீதியை வெளிப்படுத்த யாரும் பின்னிற்கத் தேவையில்லை. இந்த அடிப்படையிலேயே வேதாகம விரோதமான செயல்களை நாவலர் பெருமான் கண்டித்தார். இதுமட்டுமன்றி நியாயமான பல உண்மைகளை வெளிப்படுத்துவதால் எமக்கு அவமானம் வரும் என மனிதர் பலர் தயங்குவது போலக் கடவுளார்க்குத் தயக்கம் ஏற்படுவதுமில்லை.

விக்கிரமாதித்தனுக்கு விநாயகர் அருள் பெரும் தகுதியில்லாதிருந் தால் தான் இலக்கணசுந்தரி தொடர்ந்து அரண்மனையில் இருக்கவும் விக்கிரமாதித்தனுக்கு காரணம் தெரியாமல் நட்டமேற்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும்.

இலக்கணசுந்தரி வஞ்சனையுடன் தெய்வ விரோதமான அலட்சிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தியுடன் அன்றிக் கவனக்குறைவால் விரதநியமனம் தவறிய படியாலேயே சில தினங்கள் துன்பமனுபவித்துவிட்டு பின்னர் விரதம் அனுஷ்டித்து நன்மை பெற முடிந்தது. பகுத்தறிவு என நம்பித் தெய்வ விரோதமாக நடக்கும் பலர் தமக்குத் தெய்வ சாபம் கிடைத்ததை அறிய முடியாமலும், அறிந்த வழியும் தீர்ப்பதற்கு இலக்கண சுந்தரிக்கு ஒரு தகுதியான குரு கிடைத்துபோல நல்ல குரு கிடைக்காமலும் தொடர்ந்து துன்புறுத்துவதிலிருந்தே இலக்கணசுந்தரியின் தூய்மையையும் அலட்சிய போக்கின் தன்மைகளையும் விளங்கிக் கொள்ளலாம்.

## 15ம் நாள்

இலக்கணசுந்தரி எறிந்த காப்பு கறி சமைக்கப் பயன்படும் கொவ்வையின் மேல் விழுந்திருந்தது. காப்பின் மகிமையால் கொவ்வைக் கொடி செழித்து வளர்ந்தது. உணவுக்காகக் கொவ்வை இலை கொய்யச் சென்ற ஏழைப் பெண்ணொருத்தி அதிலிருந்த காப்பை விநாயக விரதக் காப்பென்று அறிந்து அணிந்து விரதம் அனுட்டித்தாள். அவள் பக்திக்கிரங்கிய விநாயகர் அருளால் அரசியாகி அரண்மனையில் வாழும் சிறப்பைப் பெற்றாள்.

விக்கிரமாதித்தனால் துரத்தப்பட்ட இலக்கணசுந்தரி ஒரு வணிகன் மனைக்குச் செல்ல அங்குள்ள நவரத்தினங்கள் எல்லாம் கல்லாய் மாற வணிகன் இலக்கணசுந்தரியைத் துரத்தினான். பின் அவள் உழவர் மனைக்குச் செல்ல அங்கும் நட்டம் ஏற்பட்டது. இவ்வாறு பல இடங்களுக்கும் செல்ல அங்கங்கு விபரீதமான நட்டங்கள் ஏற்பட்டன.

துன்பம் வரும்போது ஒருமித்து வரும் என்பது மட்டுமன்றி தெய்வ சாபத்திற்கு ஆளானாவன் என்று சென்றாலும் தப்ப முடியாது என்பது இலக்கணசுந்தரியின் அனுபவங்கள் உணர்த்துகின்றன. இப்படித் துன்பப்படுவோர் தெய்வத்தையோ அரசையோ துன்பம் செய்வோரையோ வெறுக்காது தீவினை தீர்விற்கு முயற்சிக்க வேண்டும். இவ்வுண்மையையும் பிள்ளையார் கதை போதிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16ம் நாள்

விக்கிரமாதித்தனின் நகர ஊர்புறத்திலிருந்த ஔவையின் குடிசைக்கு கடைசியாக இலக்கணசுந்தரி சென்றாள். தவபலமும் விநாயகர் அருளும் மிக்க ஔவை இலக்கணசுந்தரியை தன் வீட்டிலே இருக்கவிட்டு சில காரியங்களுககாக ஊருள் சென்றாள். அங்குள்ளவர்கள் ஔவையை பழித்தும், கல் எறிந்தும் துன்புறுத்தினர். வீடு திரும்பிய ஔவை "உனக்கு மட்டுமன்றி நீ தங்கி இருக்கும் இடத்தில் இருப்பவர்களுக்கும் துன்பம் ஏற்படுத்தும், நீ யார்? என்று கேட்க இலக்கணசுந்தரி தான் ஒரு அரசன் மகள் என்பதையும் விக்கிரமாதித்தன் மனைவி என்பதையும் கூறினாள்.

தன்னை அடைந்தவர்களின் பாவத்தை அறியும் வல்லமையும் அவர்களைப் பாவத்தில் இருந்து விடுவித்து நன்மை அடையச் செய்யும் திறமையும் ஆகிய சைவசமயக் குருமாருக்குரிய இயல் உடைய ஔவை இலக்கணசுந்தரிக்கு இரங்கி உதவத் திருவுளங் கொண்டாள்.

கந்தபுராணம் - பெரியபுராணம் - இராமாயணம் போன்ற முழு இலக்கிய நூல்களைப் பூசித்து கயிறு சாத்திப் பார்த்து பிரச்சினையையும், தீர்வையும் உணரும் நம் சம்பிரதாயப்படி புத்தகத்திற்கு நூல் சாத்திப் பார்த்து விரத அனுட்டானத்தில் ஏற்பட்ட தவறே இலக்கணசுந்தரியின் துன்பங்களுக்குக் காரணம் என்பதை ஔவை கண்டுபிடித்தாள்.

இலக்கணசுந்தரி விரதமிருந்த காலத்தில் மேற்கொண்ட நியமம், விநாயக விசுவாசம் என்பனவே அவளைத் தகுதியான குரு ஒருவரை அடுத்து நன்மையுற வாய்ப்பாக இருந்தது என்பதைப் பிள்ளையார் கதை மூலம் நாம் உணரவேண்டிய நுட்பமான தத்துவமாகும்.

## 17ம் நாள்

ஔவையின் உதவியின்றி இலக்கணசுந்தரி விரதம் இருக்கவும் முடியாது. இவ்வுண்மையை நாம் உணரும் வகையிலேயே தன் தீவினையையும் தீர்வையும் அறிவதற்காக சாணம், நீர் என்பன எடுத்து நிலத்தைப் புனிதப்படுத்த இயலாது இலக்கணசுந்தரி அவதிப்பட்ட நிகழ்ச்சி சொல்லப்பட்டுள்ளது.

உணவு நியமனத்தைக் கடைப்பிடித்தும் விநாயக வழிபாடு செய்தும் ஔவை வாயிலாகப் பிள்ளையார் கதைகள், தத்துவங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைகளைக் கேட்டும் விரதமிருந்து இலக்கணசுந்தரி விநாயகர் அருள் பெற்றாள்.

சைவசமயத்தில் மட்டுமன்றி உலகில் உள்ள பெரும்பான்மையான சமயங்கள் கூறும் முறையில் குருமாருக்கு இன்றியமையாமையையே இலக்கணசுந்தரிக்கு உதவிய ஔவையின் செயல் உணர்த்துகின்றது.

தகுதியான குருவை அடையாவிட்டால் குருடனுக்கு குருடன் வழிகாட்டுவது போல் இருக்கும் என்று திருமூலர் வாக்கை மறவாதிருப்பதோடு நல்ல குருவை அனைவருக்கும் கிடைக்கச் செய்யபவர் விநாயகர் என்பதை இலக்கணசுந்தரி ஔவையை அடுத்த நிகழ்ச்சியிலிருந்து உணரவேண்டும். ஓங்காரரூபியான -ஞான முதல்வராக உள்ள விநாயக வழிபாட்டால் குருவாக உள்ளவர் தமக்குரிய தகுதியை அடையலாம். நல்ல குருமாரை அடைய விரும்புவர்களுக்கும் விநாயக வழிபாடு செய்வதால் நல்ல குருவை அடைவதோடு அவரால் தீவினை தீர்த்து நல்லருள் பெற்று இறையருள் பெறலாம்.

## 18ம் நாள்

நடுக்கடலில் சென்றாலும் நாயக்கு நக்குத்தண்ணிதான் என்றபடி கடனாளியாயும் தரித்திரனாகவும் இருக்கவேண்டியவன் பெரும் தொகைப்பணம் இருந்த போதும் துன்புறுவது புதுமையல்ல. ஆனால் குறைந்த வருமானம் உள்ளவன் மகிழ்ச்சியுடனும் சிறு சேமிப்பால் பெரும்தொகை செல்வத்தை அடைந்து விளங்குவதும் தான் பலருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணுகின்றது. இப்படியான ஆச்சரியமான நிகழ்ச்சிகளுக்கு உண்மைக் காரணம் தெய்வ அருள் என்பதை உணர வேண்டும் என்று கூறுகின்றது பிள்ளையார் கதை.

இலக்கணசுந்தரி பிள்ளையார் கதை விரதமனுட்டித்து விநாயகர் அருள் பெற்ற பின் விக்கிரமாதித்தன் மிகுந்த களைப்புடனும் பெரும் படையுடனும் ஔவை இருந்த இடத்தை அடைந்தான். ஔவையின் ஆணைப்படி குருமொழியை அநுசரித்தும் சீடரின் பணிவுடன் பிள்ளையாரின் நிவேதனமான அப்பமும் நீரும் அரசர்க்குக் கொடுத்தாள். இலக்கணசுந்தரி கொடுத்த அப்பமும் நீரும் அரசனுக்கும் பெரும் படைக்கும் திருப்தியளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுசுவை உணவினால் நீங்காத நீர் வேட்கை ஒருவேளை நீரால் தீர்வது போல பெரும் தொகை உணவால் ஏற்படவேண்டிய களை நீக்கமும் உற்சாகமும் இலக்கணசுந்தரி கொடுத்த அப்பத்தாலும் நீராலுமே அரசனுக்கும் படைக்கும் ஏற்பட்டன.

## 19ம் நாள்

அப்பமும் நீரும் தன்னிடம் பெற்றுத் திருப்தியுற்றது தனது கணவனான விக்கிரமாதித்தனே என்பதை இலக்கணசுந்தரி உடனடியாகவே அறிந்திருந்தாள். ஆனால் விக்கிரமாதித்தனால் அறிய முடியவில்லை.

"ஆச்சரியப்படத்தக்க வகையில் உணவு தந்த நீ யார்?" என்று அரசன் கேட்ட கேள்விக்கு ஔவையே "கணபதி நோன்பின் காரணம் காண் இது குணமுடை இவள் உன் குலமனையாட்டி" என்று பதில் கூறினாள்.

விநாயகர் கனவில் கட்டளையிட்டதால் பிரிய நேரிட்ட மனைவியை விநாயகர் பிரசாதமான அப்பமும் நீருமே சேர்த்து வைத்தது என்று சொல்லத்தக்க வகையில் விக்கிரமாதித்தன் சுந்தர ஒளி போன்ற வெண்மையான ஒளியைப் பரப்பும் வெள்ளிச் சிவிகையில் மனைவியை அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

புண்ணியம் மேல் நோக்குவிக்கும் என்ற பிரமாணத்திற்கமைய இலக்கணசுந்தரி மகிழ்ச்சியான வாழ்க்கையை அடைந்தாள்.

விரதத்திற்கு இடையில் ஏற்பட்ட தவறும் அதன் பயனும் கனவாக ஒரு படிப்பினையாகவும் இருக்குமேயன்றி விரதம் மேற்கொள்வார் இன்பமே அடைவர் என்பதை நமக்கு இலக்கணசுந்தரி உணர்த்துகின்றாள்.

## 20ம் நாள்

விநாயகசஷ்டி விரதம் அனுட்டித்தவர்கள் திருமால் - சிவன் அம்மை - வச்சிரமாலி - இலக்கணசுந்தரி ஆகிய அனைவரும் விரத காலத்தில் பிள்ளையார் கதை கேட்பதை நியமமாகக் கொண்டிருக்கி றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விரதம் அனுட்டிக்கும்போது அவ்விரதம் அனுட்டிக்கும் நியமத்தை மட்டுமன்றி அவ்விரதத்தின் பெருமை - அதை அனுட்டித்து அருள் பெற்றவரின் வரலாறு - விரதத்தால் இறைவன் மகிழும் தன்மை போன்றவற்றையும் கேட்டறிதல் அவசியம்.

விரதகாலங்களில் இறைவனது அரும் செயல்கள், வழிபாட்டு முறைகள், வழிபட்டு பயன்பெற்றவர் என்பவற்றைக் கேட்பது செவியால் வழிபடுத்தல் எனப்படும்.

செவிகாள் கேண்மின்களோ என்று செவியால் வழிபடுதலின் அவசியத்தை வலியுறுத்துவார் திருநாவுக்கரசர்.

திருவிழா - கும்பாபிஷேகம் என்பவற்றை விமர்சையாகவும், கிரமமாகவும் செய்வோர் செவியால் வழிபடும் போதே தம்செயல் முழுமை அடையும் என உணர வேண்டும்.

கேட்கத்தக்க நல்ல கருத்துக்களைப் பெற்றிருப்பவர் நல்ல விடயங்களைக் கேட்கவில்லையானால் செவிட்டுக் காதுகளுடன் இருப்பதற்குச் சமன் என வள்ளுவர் 413ம் குறலில் தெளவுபடுத்துகிறார். காதுகளால் கேட்கத்தக்க நல்ல விடயங்கள் முதல் தரமானவை சிவகதை, தவக்கதைகளேயாகும்.

பிள்ளையார் கதை விரதம் அனுட்டிப்பது மட்டுமன்றி பிள்ளையார் கதையைக் கூறுவதும், கேட்பதும் பிள்ளையார் அருள்பெற உதவும். பிள்ளையார் கதை கூறுவதாலும் கேட்பதாலும் ஏற்படும் நலன்களை பொன்னுமிகும் கல்விமிகும்... முதலிய நான்கு வெண்பாக்கள் அழகாகக் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சார்ந்த நன்றிகள்

**கடந்த 2021.03.26 வெள்ளிக்கிழமை**
**சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு**

**அமரர்**

**தியாகராஜா ஐயா பொன்னம்பலவாணர் ஐயா**

அன்பின் உறைவிடமாய் இருந்து எமக்கு நல்வழி காட்டிய எமது அன்புத் தெய்வம் அமரர் பொன்னம்பலவாணர் ஐயா அவர்கள் திடீரென எம்மை விட்டுப் பிரிந்த நேரம் உடன் வந்து உதவியவர்களுக்கும், இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இணையத்திலும், பத்திரிகை மூலமும் இரங்கற் செய்தி வெளியிட்டவர்களுக்கும், இந் நினைவு மலரிற்கான அஞ்சலி உரைகளை வழங்கிய பெரியோரிற்கும், எமக்கு உதவியாகவும், உறுதுணையாகவும், ஆதரவாகவும், வந்து நின்று சகல விதங்களிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"



பொன்னாலை. குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org